# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



பிப்ரவரி 1975

விலை 75 சதம்

கலை இலக்கிய மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான மோட்டார் வாகன
உதிரிப்பாகங்களும் கட்டுப்பாட்டு விலையில்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்

விநியோகஸ்தர்கள்
ஸ்ரீ லங்கா
அரசாங்க வர்த்தக (பொதுக் கூட்டுத்தாபனம்

புஸ்பா அன் கோ
281/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

* அழகான அச்சக வேலைகளுக்கு
* அட்டைப் பெட்டிகளுக்கு
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்
புத்தகங்கள் கட்டிக் கொடுப்பதில் தனிப் பிரசித்தி
பெற்றவர்கள்

விஜயா அச்சகம்
209, பழைய சோனகத்தெரு
கொழும்பு-12

தொலை பேசி. 32816

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜவாத் மரைக்கார்
(சோலைக்குமரன்)


# மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம்-கவி
யாதியினைய கலைகளில்-உள்ளம்
ஈடுபட் டென்றும்நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

## பத்தாவது ஆண்டு

பெப்ரவரி 1975 82


ஒரு மகிழ்ச்சியான செய்தி. எதிர்பாராத — நாம் இதுவரை கேள்விப்படாத — ஊர்களில் இருந்தெல்லாம் மல்லிகைக்குச் சந்தாக்கள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இது மல்லிகையின் சாதனை மாத்திரமல்ல, அங்கங்கே உள்ள உண்மையான இலக்கிய ஆர்வலர்களும் மல்லிகை அபிமானிகளும் மனப்பூர்வமாக உழைப்பதின் நிமித்தமாகவே இந்த அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டுள்ளோம்.

இன்னும் சற்றுச் சிரத்தை எடுத்து இலக்கிய நெஞ்சங்கள் உழைக்க வேண்டும். யார் யார் உண்மையான இலக்கிய ஆர்வமும் பாசமும் கொண்டுள்ளார்களோ அவர்களை இனங் கண்டு அவர்களுக்கு மல்லிகையை அறிமுகப்படுத்துவதுடன் அவர்களையும் மல்லிகைச் சந்தாதாரர் பட்டியலில் இடம்பெறச் செய்யவேண்டும்.

மல்லிகைச் சந்தாதாரராக இலக்கியப் பட்டியலில் இடம் பெறுவதே எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான தொடர்புகளுக்கும் நமது சுற்றுப் பயணத்தில் சந்தாதாரரது ஊர்களுக்கு வரவும், வருவதால் சினேகச் சந்திப்புகளுக்கு வழி சமைக்கும் என்பதாலேயே இக் குறிப்பைச் சற்று அழுத்தமாக இங்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

மல்லிகை வாசகர்கள் கருத்துக்களைத் துணிந்து எழுத முன்வரவேண்டும். பல அபிப்பிராயங்களையும் முன்வைத்து விவாதித்து, ஆரோக்கியமான முடிவுகளை நாம் தொடர்ந்து எடுத்துச் செல்வதற்கு அவர்களது கருத்துக் கடிதங்கள் உதவும் என்ற நம்பிக்கையாலேயே இதை வற்புறுத்திக் கூறுகின்றோம்.

ஆசிரியர்.

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து,
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்;
பொறுப்பும் அவரே.


மல்லிகை
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே .எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மல்லிகைப் பந்தலின் கொழுக் கொம்புகள்



டாக்டர் வாமதேவன்

மல்லிகையின் மீது ஒரு குடும்ப பாசம் வைத்து அன்பு செலுத்தி வருபவர்தான் டாக்டர் வாமதேவன் அவர்கள். எனக்குத் தெரிந்தவரையில் மல்லிகையைத் தனது இன்னொரு பெண் குழந்தை என்றே கருதி அதை வளர்த்து வருகின்றார்; சகல உதவிகளையும் செய்து வருகின்றார் என்றே நான் கருதுகின்றேன்.

மார்பு நோய் நிபுணரான இவர் இன்று வெலிசறையில் கடமை புரிந்த போதிலும் கூட, மாதம் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்து மல்லிகையின் சேம லாபங்களைப் பற்றி விசாரித்து ஆலோசனைகளைச் சொல்லித் தருவார்.

இவரும் நானும் சினேகமாகியது மல்லிகை மூலமல்ல. 'தண்ணீரும் கண்ணீரும்' வெளிவந்த புதுசில் இவர் யாரிடமிருந்தோ அந்தத் தொகுப்பை பெற்றுப் படித்து விட்டு, படித்த புத்தகத்தைப் பலரிடம் கொடுத்துப் படிக்கத் தூண்டிவிட்ட சமயத்தில் அவரது நண்பரும் எனது நண்பருமான திருநாவுக்கரசுவிடம் என்னை எப்படியும் சந்திக்க வேண்டும் என ஆவல் காட்டினாராம். பின்னர் இருவரும் கொழும்பில் சந்தித்தோம். 13 — 14 வருடங்களாகியும் அந்த இலக்கிய நட்பு புதுப் புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

மல்லிகை வளர்ச்சியின் உயிர் மூச்சுக்களில் இவர் ஒருவர்.

மௌனி; மென்மையானவர்; எளிமையானவர்; உரக்கப் பேசாதவர்; எந்தவித விளம்பரத்தையும் விரும்பாதவர். ஆனால் குணக் குன்று. ஆழமான அரசியல், இலக்கியக் கருத்தோட்டம் உள்ளவர். தனது கொள்கைக்காகப் போராடுபவர்.

'இந்த நாட்டில் மிகச் சிறந்த மனிதப் பண்புள்ளவர்கள் 25 பேர்களின் பெயர்களைச் சொல்லு' என யாராவது என்னிடம் கேட்டால் இவரும் எனது எண்ணுக்குள் அடங்குவார்.

சங்கீதக் கலையில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள இவர், தனது குடும்பத்தையே ஒரு கலைக் குடும்பமாகச் செழிக்கச் செய்து வருகிறார். இவரது இளைய மகள் ஒரு பாடகி.

என்றும் எனது மனதில் பசுமையாக இருப்பது ஒன்று. காரியாலயத்தில் புத்தகங்கள், பைல்கள் சிதறிப்போய்க் கிடப்பதைப் பார்த்துவிட்ட இவர், ஒருநாள் தனது வீட்டிலிருந்தே 'பிராக்கெற்' ஒன்றை கழற்றி வந்து தானே தன்னந் தனியனாக அதை மல்லிகைச் சுவரில் பொருத்தி ஆணியடித்துப் பொருத்திவிட்டார்.

இப்படியான அருமையான நெஞ்சங்களை மல்லிகை பெற்றிருப்பதுதான் மல்லிகையின் மிகப் பெரிய பலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பேதான் மல்லிகையின் மூலதனம்

மல்லிகை

# பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்போம்— புரிந்து கொண்டவர்கள் கூடிப் பேசட்டும்!

படு நாசகரமான கருத்தொன்று இன்று தமிழ் மக்கள் மத்தியில் விதை தூவப்படுகின்றது.

'தனி நாடு பெறுவோம்' என்ற இந்தக் கருத்துக்குப் பின்னால் சாதி வெறியர்களும் சுரண்டல் கூட்டமும் பிற்போக்கு இனவாதிகளும் சர்வதேச ஏகாதிபத்தியக் கும்பலும் அணி சேர்ந்து நிற்கின்றன என்பதைச் சிந்திக்கத் தெரிந்த தமிழ் மக்களுக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

'தனி நாடு காண்போம்!' என்ற இந்தக் கூக்குரலுக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்பவர்கள் யார் — யார்?

ஸ்ரீமான் சுந்தரலிங்கம் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றார். இவரே இந்தக் கற்பனைத் தமிழ் நாட்டுக்கு ஜனாதிபதியாக நியமிக்கப்பட வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறாராம்.

இந்தச் சுந்தரலிங்கம் யார்? மாவிட்டபுர ஆலயத்தில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் போய்க் கும்பிட அனுமதி மறுத்த மகானுபாவர். பச்சை உயர் சாதி அகம்பாவத்தால் ஒரு பகுதி மக்களின் மனதில் ஆழமான ஆறாத வடுவை ஏற்படுத்திவிட்ட இவரும் இந்தத் தமிழ் நாடு இயக்கத்தில் ஓர் அங்கம்.

எட்டு இலட்சம் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் வாழுகின்றனர். அப்படியானவர்களின் கைகளில் அரசியல் அதிகாரமும் இருந்துவிட்டால் — தனிநாடு கிடைத்துவிட்டால் — இந்தப் பாமர மக்கள் இன்று அனுபவித்து வரும் அற்ப சொற்ப உரிமைகளும் மறுக்கப்பட்டு, நிரந்தர அடிமை — குடிமைகளாக மாற்றப்பட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது?

இவர்களினது சென்ற கால நடைமுறைகளை முன் வைத்துப் பார்த்தால் இப்படியான மக்கள் பயப்பிராந்தி கொள்ள நிச்சயம் இடமுண்டு. அதற்கு ஆதாரமுமுண்டு.

அடுத்து நிற்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக எல்லா விதமான தேசிய-பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்கு வந்த வேளைகளில் மொழியை முன் நிறுத்தி தேசத்தை நாசப்படுத்தியவர்கள். முற்போக்கு மாற்றங்களைக் கணக்கில் எடுக்காமல் இனவெறியை

வர்க்க நண்பர்கள் தென்னிலங்கையில் ஆட்சி பீட அதிகாரத்துக்கு வந்தவுடன் எல்லாப் போராட்டங்களையும் மூட்டை கட்டி வைத்துவிட்டுக் கூடிக் குலாவி மகிழ்ந்தவர்கள். இவர்கள்தான் இன்று கூறுகின்றனர்: 'தனி நாடு வேண்டுமாம்!'

அடுத்து நமது பொருளாதாரப் பிரச்சினை. இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது நமது விவசாயப் பொருளாதாரம். சிங்களப் பிரதேச மார்க்கட்தான் நமது மிகப் பெரிய சந்தையுமாகும். இலட்சக் கணக்கான தமிழரது வியாபார நிலையங்கள் இன்னமும் தென்னிலங்கையிலேதான் உள்ளன. அது மாத்திரமல்ல; பிரிவினை பேசுகின்றவர்களின் சொத்துப் பத்துக்கள்-தோட்டம், பங்களாக்கள் இன்னமும் சிங்களப் பிரதேசங்களில் தான் இருக்கின்றன என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். இன்னும் ஏராளமான அரசாங்க ஊழியர்கள் வெளிப் பிரதேசங்களில் உத்தியோகம் பார்த்து வருவதையும் அவர்களினது வாழ்வு-தாழ்வு அனைத்தும் அவ்வப் பிரதேசங்களில் பிணைக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இவை அனைத்தையும் நாம் நிதானமாகச் சிந்தனையில் எடுத்துக் கொண்டுதான் இந்தத் தனிநாடு கோரிக்கையைப் பரிசிலனை செய்ய வேண்டும்.

இந்தப் பிரிவினையை முன் வைப்பவர்களின் சென்ற கால அரசியல் வரலாறு என்ன? இவர்களது பின்னணி எப்படிப்பட்டது? இவர்கள் எந்தக் காலத்திலாவது தமது அரசியல் கருத்துக்களை நேர்மையாக மக்கள் முன் வைத்துள்ளார்களா என்பதையும் நாம் தீர யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒட்டு மொத்தமாகச் சொன்னால் எல்லாமே குளறுபடி. எல்லாரும் எல்லாருடனும் முரண்பாடு. கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதக் கூட்டுக் கும்பல் அரசியல் வியாபாரத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றது என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியுள்ளது.

சமீபத்தில் காங்கேசந்துறை இடைத் தேர்தல் சம்பந்தமாக பிரதமர் அறிக்கை வெளிவந்துள்ளது. அது ஒரு முற்போக்கான அம்சம். 'தமிழ் மக்களுக்குத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உண்டு. அதைச் சுமுகமாகப் பேசித் தீர்ப்போம்' என்பது அதன் உள்ளடக்கம். இதற்கு மறுமொழியாக 'நாம்தான் மக்களின் பிரதிநிதிகள். எம்முடன் பேசுங்கள்' என அழைத்துள்ளார்கள் இந்தத் தனிநாடு பிரிவினைவாதிகள்.

'உனது தேசமும் எனது நாடும் வேறு வேறு' எனச் சொல்ல முற்பட்டதற்குப் பின்னால் இவர்களுடன் என்ன சமரசப் பேச்சு பேசவேண்டியுள்ளது? பிரதமர் பிரச்சினையைப் பேசித் தீர்க்க முன் வந்துள்ளதை நாம் மனமாரப் பாராட்டுகின்றோம். அதே வேளையில் சாண் ஏற முழம் சறுக்கி அரசியல் விளையாடும் இவர்களுடன் பேசுவதில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படமாட்டாது.

பிரதமர் பேசுவதாக இருந்தால் தமிழையே தங்களது வாழ்வாகக் கருதும் கல்விமான்களுடன், எழுத்தாளர்களுடன், தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன், முற்போக்கு அணியில் நீண்ட காலம் போராடி வரும் அரசியல் தலைவர்களுடன் பேசித்தீர்க்கட்டும்.

இவர்களுடன் பேசினால், கடைசியில் 'உனக்கும் பெப்பே... உன் புருஷனுக்கும் பெப்பே...' என்றுதான் முடிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தி: 'இரத்தினம்ஸ்' போன்: 444

# ஹரன் ஜுவல்லர்ஸ்

தங்க வைர நகை - வியாபாரிகள்

நவீன டிசைன் நகைகளுக்கு புகழ்பெற்ற
ஸ்தாபனம்

ஆர். ஜி. பில்டிங்,
50, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.


# நினைவாஞ்சலி

31-12-1969 ல் காலஞ்சென்ற
எமது தந்தையார்

## திரு. எம். இராமசுந்தரம் அவர்களது

ஐந்தாவது சிரார்த்த தினத்தை நினைவு கூர்கிறோம்.



எம். ஆர். தருமையா
,, ,, கருப்பையா
,, ,, இராசையா
,, ,, ரெங்கநாதன்
,, ,, இராஜதுரை
,, ,, சத்திவேல்பிள்ளை

போடேஸ் தோட்டம்
வத்துமுல்லை.

எம். இராமசுந்தாம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு கேள்வி

சென்ற இதழில் சாந்தன் எழுதிய 'அந்நியமான உண்மைகள்' சிறுகதையைப் பற்றி பல விதமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றனவே. இதைப் பற்றி உங்களது கருத்துக்கள் என்ன? தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க, அதற்கான முயற்சிகள் இலக்கியத் துறையில் செய்யப்பட்டு வரும் இந்த வேளையில் இப்படியான சிறு கதைகள் மல்லிகையில் பிரசுரிக்கப்படுவது தேவைதானா? அக் கதையை நீங்கள் படித்துப் பார்த்துத்தான் பிரசுரித்துள்ளீர்களா? இதை அறிய நான் மாத்திரமல்ல, பலரும் விரும்புகின்றோம்.

பன்னாலை.

அ. கார்த்திகைக் குமரன்.

படித்துப் பார்த்துத்தான் பிரசுரித்தோம். அத்துடன் அக் கதை பிரசுரிக்கப்படுவதற்கு முன்னர் நண்பர் ஏ. ஜே. கனகரெட்ணாவிடமும் படிக்கக் கொடுக்கப்பட்டது. சில கருத்துக்கள் மல்லிகையின் பொது நோக்குக்கு ஒத்துவராத போதிலுங்கூட, சில சந்தர்ப்பங்களில் சிலதை வெளியிட வேண்டிய தேவை பத்திரிகைகளுக்கு ஏற்படுவதுண்டு. அப்படியொரு தேவையை ஒட்டியே அக் கதை பிரசுரிக்கப்பட்டது.

சாந்தன் மல்லிகையில் ஒரு பிரசுரப் போரைச் சில மாதங்களுக்கு முன்னர் முடுக்கி விட்டிருந்தார். சில முஸ்லிம் கவிஞர்கள் மற்றைய மதத்தினர் மனம் புண்படக் கூடிய கருத்துக்களை வெளியிடுவதாகக் குற்றஞ் சாட்டியிருந்தார். தேசிய ஒருமைப்பாட்டிற்கு இவை மிகப்பெரிய குந்தகம் என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். உண்மையும் நேர்மையும் தேசிய ஒருமைப்பாட்டை விரும்புபவர்கள் இந்தத் தவறைச் செய்யக்கூடாது என வாதிட்ட அவர், தமது முடிவுக் கடிதத்தில்: 'இவ்விரு கவிதைகளும் முற்போக்குக்கோ, தேசிய ஒருமைப்பாட்டுக்கோ எந்தளவுக்குப் பங்களித்துள்ளன? மாறாக இப்படியான கவிதைகள், அந்தச் சொல்லப்பட்ட ஒருமைப்பாட்டை எந்தளவிற்குத் தூரமாக்கி விடுகின்றன என்பது, சிலவேளை சிலருக்குப் புரியாமலிருக்கலாம்; எங்களுக்குப் புரிகிறது' என அக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

தேசிய ஒருமைப்பாட்டை அவர் புரிந்துகொண்டுள்ள விதத்தை மல்லிகை வாசகர்களுக்கு சிருஷ்டிபூர்வமாக விளங்கப்படுத்தவே அக்கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இலக்கிய உலகில் நமக்குப் பல அனுபவங்கள் உண்டு. ஒன்றை மாத்திரம் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். முற்போக்கு எனக் காலத்துக்குத் தகுந்த மாதிரிப் பேசுவதெல்லாம்— எழுதுவதெல்லாம் — முற்போக்கல்ல.

நெருக்கடிகளுக்கு மத்தியில்—இனவெறியர்களின் கடுகதிப் பிரசாரங்களுக்கு இடையே—எவனொருவன் நிதானமாகச் சிந்தித்து மனித குலத்துக்குப் பொதுவான நெறிகளைக் கடைப்பிடிக்கின்றானோ அவனது கருத்துக்களே வாழும்; காலத்தால் மலியாமல் இருக்கும்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அட்டையில்: **தோழர் வி. பி.**

# போலிகளின் கை ஓங்கியிருக்கும்போது உண்மைகள் தோல்வியடைகின்றன!

வட மாகாணச் சரித்திரமே இதுவரையும் கண்டும் கேட்டுமிராத வகையில் பொங்கிப் பிரவகித்த ஆற்று வெள்ளத்தில் மிகத் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் எதிர் காலத் தீர்க்க தரிசனத்துடனும் எதிர் நீச்சலடித்து மக்களின் பேராதரவை முற்போக்கு இயக்கங்களுக்குச் சாதகமாகப் பெற்றுத் தந்த தோழர் வி. பி. யை மனமார, நெஞ்சார, இதய பூர்வமாகப் பாராட்டுவதில் முற்போக்குச் சிந்தனை படைத்த தமிழ் மக்களினது சார்பாகப் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றோம்.

இன வெறியர்களும் சந்தர்ப்பவாதிகளும் மொழி வெறியை அரசியல் வியாபாரமாகக் கருதிச் சொக்கட்டான் ஆடித் தமது வர்க்க நண்பர்களின் பாதுகாவலர்களாகப் பொறுத்த நேரத்தில் பாதுகாக்க முனைந்து செயல்படும் தமிழ் மக்களின் அடிப்படை எதிரிகள் இவரை, 'எட்டப்பன்' என்றனர். 'காட்டிக் கொடுப்பவன்' என வசைபாடினர். 'சிங்கள அடிவருடி' எனக் கோஷமெழுப்பினர். 'தமிழர்களின் பகைவன்' என மொட்டை நோட்டீஸ் வெளியிட்டனர்.

இதே இவர்கள் யு. என். பி. பிற்போக்குக் கூட்டத்துக்கு நாலரை ஆண்டுகாலம் பந்தம் பிடித்ததை கீறிக் கிழித்துக் காட்டியதைக் கண்டு தரங்கெட்ட முறையில், தனிப்பட்ட முறையில் கேவலமாக அவரை வசைபாடித் தீர்த்தனர்.

'தோற்றுவிட்டாரே!' எனச் சிலர் கொக்கரிக்கலாம். அண்ணா அவர்களை அவரது காஞ்சிபுரம் தொகுதியில் வைத்து பஸ் முதலாளி நடேசமுதலியாரைக் கொண்டு இதே விதமாகத் தோற்கடித்தவர்தான் கிங்மேக்கர் திரு. காமராஜர்.

அடுத்த தடவை, அதே காமராஜர் அவர்களை ஒரு கல்லூரி மாணவனைக் கொண்டு அவரது விருதுநகர்த் தொகுதியில் அண்ணா தோற்கடித்துக் காட்டியதுடன், தமிழக முதல் அமைச்சரானதையும் சிந்திக்கத் தெரிந்த தமிழ் மக்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தோல்விகள் வி. பி. யைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்சினையேயல்ல. அல்லது தோல்வியடையச் செய்த மக்களை வெறுத்து ஒதுங்கச் செய்பவைகளுமல்ல.

திட்டமான தீர்க்க தரிசனம் ஒன்றை இந்தக் கட்டத்தில் சொல்லி வைக்க விரும்புகின்றோம். அடுத்த பொதுத் தேர்தலில் எந்தக் கொம்பன்தான் வி. பிக்கு எதிராகப் போட்டி போட்ட போதிலும் கூட, அவர்தான் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பதை இப்போதே தீர்க்கமாகச் சொல்லி வைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "போலிகள்"

**கே. எஸ். சிவகுமாரன்**

---

புதுக் கவிதைத் தொகுதி வரிசையில் ஐந்தாவது வெளியீடு இது. சமுதாயத்தின் போலிகளையும், பொங்கி எழும் உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுவது ஆசிரியரின் நோக்கம் முப்பத்தாறு தலைப்புக்களில் சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளை அவர் அங்கதமாகக் கூறியுள்ளார். நம்பிக்கை, எச்சரிக்கை, ஆட்சோபனை, சவால், முரண்பாட்டுச் சித்திரிப்பு, உண்மை நிலை உணர்வு, அங்கதம், இழிவரல் என்று பல பகுதிகளாக இவருடைய கவிதைகளைப் பகுக்கலாம்.

ஏமாற்றுக்காரர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கவும், மாறுதல்களைக் காணவும் கவிஞர் ஆசைப்படுகிறார். 'அதிகாரத் துகள்களைத் தூவி என்னுளும் போல அக்கினித் தணல் நிறைந்த நெஞ்சங்களின் உழைப்பு மணத்தை இனிமேலும் நுகர எண்ண வேண்டாம்' என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். கவிஞரின் இன்னொரு வரியும் நுகரத்தக்கது: உள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சிகளின் அனலால்தான் கந்தைத் துணி இல்லாதவர்கள் குளிர் காய்கிறார்கள்.

லோகேந்திரலிங்கத்தின் கவிதைகளில் நம்பிக்கை தொனிக்கிறது. உதாரணங்கள்: (1) கைகட்டி நிற்கும் உழைப்பாளிகள் தோட்டத்தில் மலர்ந்த சிவப்பு நிறச் செவ்வந்திப் பூக்கள் நம்பிக்கை ஒளி தருகின்றன. (2) உவர்ப்பான எம் வியர்வை உங்கள் நிலங்களில் ஊறினால்தான் உங்கள் உடல்களிலும் உதிரங்கள் ஊறும்.

ஆசிரியர் நகைச்சுவையாக சில முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுகிறார்: (1) நாயை நன்றியுள்ள மிருகம் என்று நயந்து கூறும் நம்மில் சிலர் ஏனோ நம்மில் ஒருவனை நாய்ப்பயல் எனவும் நகையாடுகின்றனர். (2) கல்வியைக் கரைகாணக் கடல் கடந்து சென்றவர் மனைவியின் நினைவினால் தற்காலிகமாக துணைவி ஒருவரைத் தேடிக் கொண்டார்.

சில இடங்களில் அங்கதம் மூலம் சோக உணர்வையும், கவிஞர் லோகேந்திரலிங்கம் ஏற்படுத்துகிறார். ஓர் உதாரணம்: நடு வீதியில் நாற்பது நிமிடங்கள் நடைபெற்ற மந்திரியின் வரவேற்பு நிறைவுறும் வரையில் வயிற்றுவலி கண்டு வேதனையோடு வைத்தியசாலைக்கு விரைந்து வந்த பெண்ணினது வாகனமும் வரிசையில் நின்றது.

இவ்வாறு பலவிதமான அனுபவங்களை சுருங்கச் சொல்லி உணர்வலைகளைப் படிப்பவர் மனத்தில் லோகேந்திரலிங்கம் எழுப்புவது குறிப்பிடத்தக்கது. அவருடைய நோக்கம் வெற்றிபெறுகிறது என்றே சொல்லவேண்டும். இவருடைய இந்தத் தொகுதி புறக்கணிக்கப்பட மாட்டாது என்பதே எனது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைக் கற்கள் குறுக்கிடுகையில்...
## புதிய ஊற்றுக்கள் புஷ்பிக்கின்றன!

**திக்குவல்லை-கமால்**

'பிலாயெலேய்... பிலாயெலேய்'

வந்த களைப்போடு சேர்த்து, அந்தச் சுற்றுவட்டாரமெங்கும் கேட்கக்கூடியதாக இந்தக் குரலை எழுப்பிவிட்டு, 'லகேஜ்' போட்டும் நிறுத்தமுடியாத அளவுக்குச் சுமைகொண்ட சைக்கிளை சபறுதாத்தா வீட்டுச் சுவரோடு சேர்த்துச் சாய்த்துவிட்டு, படிக்கட்டில் அமர்ந்தான் இஸ்ஸதீன்.

வேகமான மேல்மூச்சு, கீழ் மூச்சுக்கேற்ப உடம்பு மேலெழுந்து பதிய, முகத்திலும் மார்பிலும் ஊற்றெடுத்துக் கொண்டிருந்த வியர்வை மணிகள் கூட்டிணைந்து மயிர்களுக்கிடையால் கீழ்நோக்கி வழிந்து கொண்டிருந்தது. இடையிடையே பலாப்பாவின் சங்கமத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியாத தூசுதுகள்களின் மொய்ப்பு.

'ஆ...... பிலாயெலேய் .... பிலாயெலேய்'

வழமைபோல் அன்றும் முதல் வாடிக்கைக் காரியான ஸௌதூதான் சாடையாய்ப் புடவையை ஒரு கையால் உயர்த்தியபடி மலைவளவால் இறங்கிக் கொண்டிருந்தாள். சொல்லி வைத்தாற்போல் ஒட்டமும் நடையுமாக முடுக்கால் லாபிர்நானு ஒட்டமும் நடையுமாக வர...... இப்படி இரண்டொரு கணத்துக்குள் ஒரு கும்பல் நான் முந்தி நீ முந்தியென்று கூடிச் சலசலத்ததென்றால் தட்டுப்பாடான சாமான் என்றும் சொல்லவா வேண்டும்?

அவன் எழுந்து, நிதானமாக பலா இலைக் கட்டை அவிழ்க்கையில்.........

'எனக்குப் பதினைசாத்துக்கு'

'மம இஸ்ஸதீன் எனக்கு ரெண்டுகட்டு'

'எனக்கு முப்பது சாத்தட'

வேண்டுதல்கள் பலபுறமிருந்தும் வந்து குவிந்துகொண்டிருந்தன. அது ஒவ்வொருநாளும் இடம்பெறும் நிகழ்ச்சியாதலால் அவன் பரபரப்படைய நியாயமில்லையே!

'ஆ ஸௌதூன் புடீங்சொ இது ஒங்களுக்கு'

'இந்தாங்கொ லாபிர்நானு'

இப்படி வரிசைக் கிரமமாக பலாயிலை கொத்துகளை பகிர்ந்து போட்டுக் கொண்டிருந்தான். அவ்வப்போது ஒவ்வொருவரின் முகச் சுழிப்புகளையும் அவன் அவதானிக்கத் தவறுவதில்லை. செழிப்பான இலைக் கொத்துகளைத்தானே எவரும் விரும்புவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹுய்.. ஹுய்' அதற்கிடையில் ஓசிக் கடிப்புக்கு வந்து சேரும் ஆடுகளை விரட்டாவிட்டால் அவனுக்குத்தானே நஷ்டம்?

சொற்ப நேரத்துக்குள் தனக்கும் தனக்கு மிகவும் வேண்டிய இன்னொருவருக்குமானவற்றையும் தவிர்ந்ததெல்லாம் விற்று முடிந்தாகிவிட்டன. பிறகு ஓடிவந்த இரண்டொருவரையும் மாலையில் தருவதாகச் சொல்லியனுப்பிவிட்டான்.

மற்ற இடங்களில் ஏறெடுத்தும் பார்க்காத வெறும் பலா இலைக்கே இங்கு இத்தனை வரவேற்பென்ருல், அதற்குக் காரணம் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டொரு ஆடு வளர்ப்பதைப் பழக்கமாகக் கொண்டிருப்பதுதான். அவை வருடாந்தம் பள்ளிவாசலில் நடைபெறும் புறுதாக் கந்தூரிக்கு நேர்த்தியாகக் கொடுப்பதற்கும், அவ்வேளையில் தேவைப்படும் மற்றவர்களுக்கு விற்பதற்குமாகத்தான். இது தவிர சொந்த வீடுகளில் நடைபெறும் கல்யாணம், கந்தூரிகளுக்கு ஆட்டிறைச்சியோடு சாப்பாடு கொடுக்காவிட்டால் அதை யாருவித தாழ்வாகக் கருதுவதும் இன்னொரு காரணம். எப்படியோ, அதன் மூலம் நாலைந்து பேர் உயிர்வாழக் கூடியதாகவுள்ளதான இந்நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது.

'எனு பிலாக்கய வெட்டல்லயா?' 'ட' மடிப்பாகக் கையை மடித்துக் குடையைத் தொங்கவிட்டவாறு சந்திப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்த லெப்ப மாமா இப்படிக் கேட்டபடி நின்ருர்.

'ஓ...... அதுக்கெனு வெட்டுவோமே' என்றவாறு பிரத்தியேகப்படுத்தி வைத்திருந்த பலா இலைக் கட்டுக்கு மேலிருந்து கத்தியை எடுத்வதாறே கண்களைப் பலபுறமும் சுழற்ற, ஆங்காங்கேயுள்ள வீட்டு வாயில்களில் முக்காட்டோடு நின்ற 'பென்சன்' எல்லையைத் தாண்டிய பெண்களைக் கண்டவுடன் அவனுக்குத் தைரியம் பிறந்துவிட்டது.

சைக்கிள் ஹான்டலில் கட்டியிருந்த பலாக்காயை அவிழ்த்து ஒரு ஓரமாக வைத்து, கைவிரல்களால் சொட்டிப் பார்த்தபடி 'மொதநொம்பர் சாமான்.. ஆட்டெறச்சி மாதிரித்தான் ஈக்கும்' என்ருெரு விளம்பரத்தையும் முன் வைத்தான். பார்த்த பார்வைக்கு இளம் மஞ்சளாகவும், விரிந்து வெடிக்கப்போவது போலவும் தோற்றமளித்ததால் அவனது மதிப்பீட்டை யாரும் பிழை சொல்லவும் முடியாதுதான்.

பலாக்காயை எடுத்துக் கால்களுக்கு முன்வைத்துப் பெருவிரல்களால் அழுத்தி, கத்தியை நடுப்பாகத்துள் குத்திப் புதைத்து குருஸ்' ஸென்ற ஒலியோடு பின்பக்கமாக வெட்டிக் கத்தியை இழுத்து, பலாக்காயை மறுபக்கம் திருப்பி எதிர்ப்பக்கமாக இன்னொரு வெட்டு வெட்ட இரு பாதிகளாகப் 'பளிச்' சென்று விரிந்தன.

'மொத நெம்பர்... கீத்து வெட்டுங்கோ...... எப்பிடியன் வெல?' லெப்ப மாமாவுக்குப் பூரண திருப்தி

அவன் மீண்டுமொருமுறை நிமிர்ந்து பார்த்தான். ஏற்கெனவே குறிப்பிட்ட பெண்மணிகள் மெதுமெதுவாக நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கீத்து நாப்பது சாம். துண்டிருவது சாம்' ஒரே மூச்சில் வெட்டிவைத்துக் கத்தி நுனியாலேயே பிசினேயும் ஒற்றியெடுந்து நிமிர்ந்தான்.

லெப்பமாமா ஒரு கீற்றை எடுத்துக் காசைக் கொடுத்துவிட்டு நகர, துண்டுகளெல்லாம் ஒவ்வொரு பெண்களது கைகளிலும் ஏறிவிட்டன. அவர்கள் தான் அடுத்தவர்களின் பேச்சில் நம்பிக்கை, ஒரு துளிகூட வைக்காதவர்களாச்சே! ஒவ்வொரு இடைவெட்டுச் சுளேத் துண்டுகளைக் கிள்ளிச் சுவை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பாடா! அவனது மடி பெறுமதியால் அல்ல, ஐந்து பத்துச்சத நாணயங்களால் கனத்ததை முடிந்திறுக்கிக்கொண்டு, மற்றப் பலாக் கீற்றையும் எடுத்தபடி... வீட்டை நோக்கி சைக்கிளேத் தள்ளத் தொடங்கினுன்.

★

பலாக்காய் அவியலுடன் பகல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பாயில் புரண்ட இஸ்ஸதீன் கண்விழித்தபோது சுமாராக மூன்று மணியிருக்கும். கை கால்களை நீட்டி முறித்து கொட்டாவி 'எக்ஸைஸை' முடித்துக்கொண்டு எழும்பி அமர்ந்தான்.

'வாப்பா இந்தாங்கொ கோப்பி' ஒரு கையில் ஆவி பறக்கும் கோப்பிக் கோப்பையும் மறுகையில் கால்வாசியளவுக்குச் சீனிகொண்ட கரண்டியுமாக வந்து நின்ருள் அவனது பதின்மூன்று வயது மூத்த மகள்.

ஒவ்வொரு நாளும் அவன் இரண்டாந் தடவையாக பின்னேரம் மூன்றரை மணிபோல் பலாயிலே வெட்டப் போவது நிரந்தர 'டைம்டேபல்' என்பதால்தான், அவள் வேளேக்கு அதனேத் தயாரித்திருக்கிருள். சின்னப் பெண்ணுக இருந்தாலும்கூட நிலைமைகளை உள்வாங்கிப் பொறுப்புக்களை அவள் சமாளிப்பதைப் பார்க்க அடிமனதுள் அவனுக்கு மிகுந்த இரக்க உணர்ச்சி.

அவளது உம்மா நான்காவது தடவையாக 'புள்ள பொறுத்துக்காரி' (பிள்ளைத் தாச்சி) யாக இருக்கிருள். இன்னும் குறைந்தது மூன்றுமாத காலத்துக்காவது அப்படித்தான் இருப்பாள்.

சைக்கிளேத் தள்ளிக்கொண்டு முற்றத்துக்கு வந்த வன் பிடவைத் துண்டால் துடைத்து 'பிரேக்' கட்டைகளை அழுத்திச் சரிபார்த்துக் கொண்டான். வெட்டுக்கத்தி ஹென்டலுக்கும் பிரேக்கம்பிக்குமிடையில் இடம்பிடித்துக்கொண்டது.

பின்னல் பிரத்தியேகப் படுத்தி வைத்திருந்த பலாயிலேக் கட்டில் கொஞ்சத்தை இடுங்கி 'இந்தா மகள் எங்கட ஆட்டுக்கு எடுத்துவை' என்று கொடுத்துவிட்டு, மீதியோடு சைக்கிளில் ஏறி உழக்கத் தொடங்கினுன். முப்பது சதத்திற்கு விற்கக்கூடிய அந்தளவும் ஜஸ்மின்நோனு வீட்டுக்குத்தான். இந்த நடைமுறை கடந்த ஆறுமாதங்களாக வழக்கிலிருந்து வருகிறதென்ருல்......

அன்று இப்படியொரு நேரம் சைக்கிள் துடைத்துக்கொண்டிருக்கும்போது நாலைந்து பெண்களோடு 'சாமத்திய' வீடொன்றுக்குப் போய்க்கொண்டிருந்த ஜஸ்மின்நோனு அப்படிநின்று 'புதுப்பணக்காரி' யென்ற திமிரோடு பார்த்தாள்.

'எங்கியன் சாமத்திய ஊட்டுக்கா போற?' பக்கத்தில் நின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த அவனது மனைவிதான் கேட்டாள்.

மெல்லிய முறுவலோடும் தலையாட்டலோடும் அதற்கான பதிலை முடித்துக்கொண்டு 'இஸ்தீன் நானா நீங்க எந்தநாளும் எங்கியன் பிலாயெல வெட்டப் போற......?' என்று கேட்டு நிறுத்தினாள்.

'நான் ரெண்டு மூனு கட்டக் கங்கல போற. ஒரு எடமென்டில்ல கெடக்கியமாதிரி' என்று ஸ்திரமற்ற தன்மையைச் சொல்லி எழுந்தான்.

'வேஹெல்ல பன்ஸலக்கி இங்கலீக்கியது எங்கட காணித்துண்டுதானே. எல்லமே பிலா மரந்தான். ஒணுமென்டால் ஒங்களுக்கு அதால வெட்டிக் கொணுவரேலும்...' சரளமாக இப்படிச் சொல்லியபோது, அப்படியொருபெருந்தன்மையை அவன் எதிர்பார்க்காததால் வியப்படைந்தான்.

'நீங்க செல்லியென்டா எனக்கும் ஒதவியா ஈக்கும்' 'வேஹெல்ல' என்னும் இடம், அவன் ஒவ்வொரு நாளும் போய் வரும் இடத்தைவிடக் குறைந்த தூரத்தில் இருப்பதால்தான் அவனுக்கு மிகவும் உதவியாகப் பட்டது.

'நாங்க பாக்கியா கேக்கிய ஈந்திட்டு ஒருநாளக்கிப் போறல்லாம. அந்தப் பொக்கத்துச் சிங்களவனியலைதான் எல்லமே திண்டு தொலக்கியானியல். இப்பிடியொத்தரு போறவாரென்டால்தான் கொஞ்சமாலும் காப்பாத்திக்கொளேலும்' பிரவேசச் சீட்டை வாயாலேயே எழுதிக் கொடுத்துவிட்டு நகர்ந்தவள் மறுபடியும் சற்றுத் திரும்பி........

'எனக்கட்டேம் ரெணுமூணு ஆட்டுக்குட்டீக்கி' என்று சொல்லிச் சென்றாள். இந்த இறுதிச் சொற்கள்தான் அவனை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பலா இலைக்கட்டைக் கொண்டுபோய் கொடுக்கச் செய்துவருகிறது.

'பெல்'லடித்துவிட்டு, திறந்திருந்த 'கேற்'றுக்குள் சைக்கிளைத் திருப்பி ஜஸ்மின்நோனாவின் வீட்டுப் பக்கவாட்டு 'ஜேம்' மரத்தடியில் நிறுத்தினான் அவன்.

'பிலாயெலேய்... பிலாயெலேய்'

பின்புறமிருந்த எடுபிடி வேலைக்காரப் பையனைக் கண்டதும் அவிழ்த்துப் போட்டுவிட்டு சைக்கிளைத் திருப்புகையில்தான் அக்குரல்........

'இஸ்ஸதீன் நானா வரவர வேல மோசமாகுது போல...'

'எனத்தியன் நோனா அப்பிடிச் சொல்லிய?' ஒன்றும் புரியாதவனாகக் குழம்பிநின்றான் அவன்.

'பிலாயெலதான் வெட்டிக் கொள்ளச் சென்ன. இப்ப பிலாக்கயெல்லாம் கொணந்து வெட்டிப்படுகிதாமே' நையாண்டிப் பாணியில் கேட்டுவைத்தாள்.

நெருப்புக் குண்டுகளை மார்பில் எறிவதுபோலிருந்தது அவனுக்கு! அன்று எப்படிச் 'சிங்களவன்' மீது சுமத்தப்பட்டதோ' இன்று அதை அவன்மீதே......

'அப்பிடிச் செல்லவா்ண நோனா. நான் பிலாக்க கொணுவாரது மெய். 'வலஸ்கல'யால வேங்கிக் கொணுவாரன்' தொண்டைக்குள்ஏதோ அடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசனோ பீலியா?

எனக்குள்ளே
ஒரு குரல்
இரகசியமாய்
ஒலிக்கிறது
நிச்சயமாக அது
எனது ஆத்மாவின்
இராகமல்ல.
உண்மையாகவே அவை
எனது
ஆஸ்துமாவின்
இராகங்களே.

கா. சி. நாதன்

துக்கொள்வது போன்ற அவஸ்தையில்தான் கதைத்தான்.

'ஹ்ம்...... அப்ப கண்ணாலை கண்டவங்க வந்து செல்லியது பொய்!'

'அப்ப நான் இனி அங்க போகமாட்டன்' வேறென்னத்தை அவனால் சொல்ல முடியும்? முடிவெடுத்துக் கொண்டு, நிமிர்ந்து முகத்தைப் பார்க்க முடியாத வெட்கத்தோடு சைக்கிளைத் தள்ளினான் இஸ்ஸதீன்.

'எனத்தியன்...... எனத்தியன்' உள்ளேயிருந்து வந்த அவள் கணவனின் குரல்தான் போலும்!

'ஒன்டுமில்ல; பாவமென்டு ஒரு ஒதவீசெய்யப் போனா இது தான் எங்களுக்குக் கெடக்கிய நன்டி'

இறுதியாகக் காதில்விழுந்த சொற்களையும் கிரகித்துக் கொண்டு சைக்கிளை உழக்கினான்.

நெஞ்சில் ஏதோ கனப்பது பேன்ற உணர்வு கால்களுக்கு வலிமை இழக்கச் செய்தது.

நான்கு வருடங்களாகப் பலாயிலைத் தொழிலை மேற்கொண்டுவரும் அவன், கடந்த நான்கு நாட்களாகத்தான் பலாக்காய்களையும் கொண்டு வந்து விற்க ஆரம்பித்தான். காரணம் இன்னொரு வழியால் சேர்ந்துகொண்டு, குடும்பச் சுமையைச் சமாளித்துவந்த சொற்ப வருவாய் தடைப்பட்டதைச் சமப்படுத்தத்தான்.

அவனது மனைவி சந்திக்கடை சோமசிறியை ஏற்பாடு செய்துகொண்டு, 'சீனிக்கோவை' அவித்தனுப்பி வருபவள். மேலதிகமாகவும் இருபது இருபத்தைந்தை, மகளை வீடுவீடாக அனுப்பி விற்கவைப்பவள். தற்பொழுது வயிற்றுச்சுமை உச்சமேறியிருப்பதால்...... தூக்கம் விழிப்பதோ, நெருப்போடு குந்திக்கொண்டிருப்பதோ, மேலதிகமாக வேலைசெய்வதோ கூடாதென்பது அக்கம்பக்க அனுபவம்வாய்ந்த பெண்களின் எச்சரிக்கை! அதனை மனதில்கொண்டு அதற்கு இடைக்கால முற்றுத் தரிப்பு வைத்ததால், நாளாந்தச் செலவுகளில் இருந்து வந்த 'வறுமையிலும் செழிப்பு' மிகவும் குறைந்துபோய் விட்டது.

இந்நிலையில் என்ன செய்வதென்ற சிந்தனையோடு, நான்கு நாட்களுக்குமுன் பலாயிலைச் சுமையோடு சைக்கிளில் வந்து கொண்டிருந்தவனின் கண்களில் பட்டாள், இரண்டு பலாக்காய்களைச் சுமந்தபடி வந்துகொண்டிருந்த கிழவியொருத்தி! அடுத்தகணம் அவற்றை வாங்கிக் கொண்டதோடு, இதைத் தொடர்ந்து செய்தாலென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர்
புதுக்கவிதைத் தொகுதி
வெளிவந்துவிட்டது

செந்நீரனின்

"விடிவு"

32 பக்கங்கள்
தனிப்பிரதி ரூ. 1-

தொடர்பு:

திக்குவல்லை எழுத்தாளர் சங்கம்
149, யோனகபுர,
திக்குவல்லை.

என்ற பரிசீலனை நிலை! அதனை விற்றுக் கிடைத்த சிறு தொகையும், ஒரு துண்டை உணவுக்குப் பயன்படுத்த முடிந்தமையும். பரிசீலனை நிலையிலிருந்து அவனை முடிவுக்குக் கொண்டுவந்தது.

அடுத்த நாளிலிருந்தே அதிகாலையிலேயே முதன் முதலில் வலஸ்கல சந்தைக்குப் போய், அதிகமல்ல ஒன்று அல்லது இரண்டு பலாக்காயை வேண்டி, ஹெண்டலில் கட்டித் தூக்கிக் கொண்டு இரண்டாவது வேலையாகத்தான் பலாயிலை வெட்ட வேஹெல்லைக்குப் போவான்; இந்த ஒழுங்குதான் அவனுக்கு வசதியாக இருந்தது.

ஆனால் இப்படியொரு எதிர் மாறான தாக்குதலை அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை. பசையுள்ளவர்கள் ளெல்லோரும், மற்றவர்களின் ஒவ்வொரு செய்கையையும் தங்களுக்கெதிரானவை என்றும் பிடுங்குதலென்றுந் தான் கற்பனை செய்துகொள்கிறார்கள். எவ்வளவு துணிச்சலாக மற்றவர்கள் மேல் அபாண்டம் சுமத்துகிறார்கள்.......?

வழமையாக வேஹெல்லை ரோட்டில்போய்க்கொண்டிருந்த அவனின் சைக்கிள் இன்று வேறொரு வழியில் விரைந்து கொண்டிருந்தது.

இரு புறமும் பலவகையான மரங்கள் செறிந்த மண்ரோட்டில், சிறியதொருதோட்டத்தை அண்டிய குடிசையருகில் மெதுவாக இறங்கினான். குடிசைக்குப் பக்கமாகக் காண்வெட்டிக் கொண்டிருந்தவன், சாடையாக அவனைப் பார்த்துச் சிரித்தான். அவனுக்கும் எப்போதோ கண்டதான ஞாபகம்......!

உழைத்துழைத்து நொந்து போன உடலும், பலாப்பாலுக்கே சொந்தமாகிப் போன ஸாரமும், கறள்பிடித்துத் துண்டு துண்டாகக் கழன்றுவிழத் தயாராகிக் கொண்டிருக்கும் சைக்கிளும் யாருக்குத்தான் அவனது நிலையைப் புரியவைக்காது.....?

'மே... கொஸ்கொல டிக்க கபாகன்னதை?' (பலா இலை கொஞ்சம் வெட்டிக்கொள்ளவோ.........?) தாழ்மையாக வேண்டி நின்றான்: குடிசையருகில் வேலை செய்துகொண்டிருந்தவனைப் பார்த்து!

'மே அஹன்னேனத......? ஒனதரம் கபாகனயன்ன' (இதைக் கேட்கவேண்டுமா? தேவையான அளவு வெட்டிக் கொண்டு செல்லுங்கள்) மிகவும் சிநேக பூர்வமான அனுமதி;

இஸ்ஸதீன் மிகுந்த முக மலர்ச்சியோடு தோட்டத்துக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தான்; ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு சுப்பிரமணியத்தின்

# தொலுக்கு முதலியார்

ஆங்கில மூலத்திலிருந்து
ராஜ. ஸ்ரீகாந்தன்.

> பிரபல ஆங்கில எழுத்தாளரான அழகு சுப்பிரமணியம் நம்மை விட்டு மறைந்து இம் மாதம் 15-ந் திகதியுடன் இரண்டாண்டுகள் நிறைந்து விட்டன. அன்னாரது ஞாபகார்த்தமாக இக் கதை இங்கு பிரசுரிக்கப் படுகின்றது.
>
> — ஆசிரியர்

சுயபாஷைப் பாடசாலை மாணவனான ஜே. ஜே பனங்கூடல் சம்பந்தமான குடும்பப் பிரச்சனை வழக்கொன்றில் சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு வந்திருந்தான். நீதிமன்றத்தில் தொலுக்கு முதலியாரின் பதவி அவனை மிகவும் கவர்ந்துவிட்டது. எப்படியாவது தானும் அப்பதவியை அடைந்தே தீரவேண்டுமென்று அன்றே முடிவு செய்துவிட்டான். அவன் சுயபாஷைப் பாடசாலையிலிருந்து ஆங்கிலப் பாடசாலைக்கு மாறுவதற்கு மாத்திரம் இது ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

ஆனால் தேசவழமைத் தம்பதிகளான அவனுடைய பெற்றோர் அவன் தொடர்ந்தும் தாய்மொழியிலேயே கல்விகற்பதை விரும்பினார்கள். தங்கள் மகன் சம்பிரதாய முறைகளுக்கு மாறான வழியிற் பிரவேசிக்கிறானென்று அவர்கள் எண்ணினார்கள். அவர்களுடைய பரம்பரையில் எவருமே ஆங்கிலம் படித்திருக்கவில்லை. எப்படியோ ஜே. ஜே. தனது எண்ணத்திற்கு அவர்களை வசிகப்படுத்தி விட்டான். எழுதுவினைஞர் பரீட்சையிற் சித்தியடைந்து அவன் ஆங்கிலக் காற்சட்டை, சப்பாத்துடன் இந்தியக் கோட்டணிந்து யாழ்ப்பாணத் தலைப்பாகை சூடி தொலுக்கு முதலியாராகக் காட்சியளிப்பதைக் காண அவர்கள் விரும்பினார்கள்.

அத்துடன் இத்தொழிலில் நல்ல சம்பளம் மட்டுமல்ல ஓய்வுப் பணமும் கிடைக்குமென்பது அவர்களுக்கு இனித்தது. அவனுடைய தந்தை சொன்னார்:

'தமிழ்ப் படிப்பிற்கு எல்லையே கிடையாது, ஆனல் ஆங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கில அறிவு நல்ல பதவியையும், பணத்தையும், புகழையும் தரும். நாங்கள் இவனை ஓர் ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்புவோம். இவனை ஒரு அரசாங்கச் சேவகனுக்கிவிட்டால் பியானோ வாசிக்கத் தெரிந்த பெண்ணொருத்தியை நாங்கள் மருமகளாகப் பெறலாம்'

ஆங்கிலப் பாடசாலையிற் யிற் சேர்ந்தபோது ஜே. ஜேக்குப் பதினேழு வயதாயிருந்தது. மனமுதிர்வு பெற்ற அவன் யாழ்ப்பாணத்திலுள்ள பழம் பெரும் பாடசாலையொன்றில் சேர்ந்து கொண்டான். அரசாங்க மொழியான அதிசய ஆங்கிலத்தைக் கற்பதில் பேரார்வம் காட்டினான். யாராவது இதுபற்றி அவனிடம் பிரலாபித்தால் 'தமிழ்ப் படிப்பிற்கு எல்லையே இல்லைத் தம்பி, ஆனால் ஆங்கிலப் படிப்பு நல்ல ஒரு பதவியையும், பணத்தையும், புகழையும் கொண்டு வரும்' என்று கூறுவான்.

ஆங்கில இலக்கணத்திற் கூடிய கவனமெடுத்துப் படித்தான். அத்துடன் விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டினையும் படிக்க ஆரம்பித்தான். உலகிலேயே மிகச் சிறந்த ஆங்கில நடையில் எழுதப்பட்ட புத்தகம் விவிலிய நூல் ஒன்றுதானென்று அவனுடைய போதகர் கூறியிருந்தார். அவருடைய முயற்சியின் பின்பு அவன் அரசாங்க எழுதுவினைஞனானான்.

இலங்கையில் பல்வேறு மாகாணங்களில் பல்வேறு திணைக்களங்களில் வேலையாற்றிய ஜே. ஜே. இறுதியில் தனது இலட்சியப் பதவியான தொலுக்கு முதலிப் பதவியை அடைந்தான். நீதிமன்றமொன்றில் தொலுக்கு முதலியாராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டான்.

ஒரு வியாழக்கிழமை முதலியார் ஜே. ஜே, கடமையேற்றார். வழக்கறிஞர்கள் நேரத்துடன் நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் கட்சியினருக்கு ஆலோசனைகள் வழங்கிப் பணம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவோ நேரத்தின் பின் நீதிபதி வந்து தனது அறைக்குச் சென்றார்.

அன்று வெய்யில் மிக அதிகமாக இருந்தது. வழக்கறிஞர்களின் கறுத்தக் கோட்டுக்கள் வெப்பத்தை வாங்கி அவர்களை வதைத்தது. நீதிமன்றத்தினுள்ளேயுள்ள வாங்குகளில் பார்வையாளர்கள் அமர்ந்திருந்தார்கள். சிலர் வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். நீதிபதி உட்பிரவேசித்தபோது எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

தொலுக்கு முதலியார் வரவுகளைப் பதிவு செய்தார். அவரை அறிந்தவர்கள் முதல் நாளன்று அவர் தொழிற்படுவதை ஆர்வத்துடன் நோக்கினார்கள். அன்று அழைக்கப்படவிருந்த வழக்குகளை விரைவில் நீதிபதியிடம் சமர்ப்பித்தார். வசதிகளுக்கேற்றவாறு தவணைகள் நிட்சயிக்கப்பட்டன. எல்லா நடவடிக்கைகளும் கச்சிதமாக இருந்தன.

புதிய சேவகன் சத்தமிட்டான். 'கொஞ்ச அமைதி'

வழக்கறிஞர்கள் சிரித்தபடி அவனை நோக்கினார்கள். சிலர் அவனைத் திருத்த முயன்றார்கள். ஆனால் அவன் தொடர்ந்தும் ஆங்கிலத்திலேயே 'கொஞ்சம் அமைதி' என்று மும்முறை சத்தமிட்டான்.

அங்கு பிரசன்னமாயிருந்த பாரிஸ்டரொருவர் சேவகனின் கருத்தை ஏற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிற் தவறு இல்லையெனச் சுட்டிக் காட்ட விரும்பிய அவர் 'கொஞ்சம் அமைதி' என்பது மிகச் சரியான, விஞ்ஞான பூர்வமான ஒரு தொடர். 'மெதுவாகப் பேசுங்கள்' என்ற சொற்தொடருக்குப் பதிலாக 'கொஞ்ச அமைதி' என்று கூறுவது இலக்கிய நயம் மிக்கதாகவும் உள்ளது என்று சிரித்துக்கொண்டே கூறினர்.

சேவகன் அவரை நோக்கிப் பணிவாகக் குனிந்துவிட்டு முன்பைவிடச் சத்தமாகக் கத்தினன் 'கொஞ்சம் அமைதி'

'அவன் சுயபாஷைப் பாடசாலையிற் படித்த ஒரு சேவகன் போற் தெரிகிறது' என்ருர் அங்கிருந்த ஒரு பொலிஸ் அதிகாரி.

வழக்குகள் ஆரம்பமாயின மின்விசிறி வெப்பமான காற்றைச் சிதறச் செய்தது. வழக்கறிஞர்களிடையே சூடான வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. மாடு சூப்பிய பனங் கொட்டையினையொத்த தலையலங்காரமுடைய ஒரு வழக்கறிஞர் அரசாங்கதரப்புச் சாட்சிகளைப் பொறுமையற்று விசாரணை செய்தார்.

புதிய தொலுக்கு முதலியார் தனது திறமையை வெளிக்காட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அறிமுகக் கேள்விகள் சிலவற்றை மிகத் துணிவுடன் கேட்டு, அவற்றிற்கான பதில்களை வெற்றிகரமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினர்.

சாட்சி தமிழிலேயே பதில் சொன்னன். சாட்சி கூறியவற்றையெல்லாம் தமிழிலேயே புரிந்துகொண்டுவிட்ட பார்வையாளர்களும், வழக்கறிஞர் சபைக்கும் அவற்றை மீண்டும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்கிக்கொண்டிருந்தார் தொலுக்கு முதலியார்.

'உனது தொழில் என்ன?' மூன்ருவது அறிமுகக் கேள்வியை வீராப்புடன் கேட்டார் தொலுக்கு முதலியார்.

'நான் அப்பம் விற்கிறவன் என்று சாட்சி கூறினன்.

முதலியார் ஒருகணம் தடுமாறினர். 'அப்பம்' என்பதற்குச் சரியான ஆங்கிலப் பதம் 'பிறெட்' என்பதை அவர் மறந்துவிட்டார்போலும்; அத்துடன் தனது முதல் நாளில் அசாதாரண சொற்பிரயோகங்கள் செய்துகொள்ள அவர் விரும்பினர்.

போதகர் கூறியது நினைவிற் குவந்தது, 'மிகச்சிறந்த ஆங்கிலப் பதங்கள் விவிலிய நூலிலேயே உள்ளன. அவர் மனம் விவிலியத்தினுள் அதற்கான சொல்லைத் தேடி அலைந்தது. யேசுநாதர் அப்பங்களையும், மீனையும் வைத்து அதிசயம் புரிந்த காட்சி அவர்முன் நிழலாடியது. 'லோஃவ்' அருமையான ஒரு சொல்.

தொலுக்கு முதலியார் கம்பீரமாகச் சபையை நோக்கித் திரும்பிச் சாட்சியின் பதிலை ஆங்கிலத்தில் கொடுத்தார். 'த விற்னஸ் இஸ் எ லோஃபர் சேர்'

முன்பே பொருளை விளங்கிக் கொண்ட நதிபதி, வழக்கறிஞர்கள், பார்வையாளர்கள் யாவரும் கொல்லென்று சிரித்தனர். 'லோ' அப்பமாயின் 'லோஃபர்' அப்பக்காரனென அவர் முடிவு கட்டிவிட்டார். ஆனல் உண்மையில் 'லோஃபர்' என்பதற்கு 'ஊர்சுற்றி' என்பதே சரியான தமிழ்ச் சொல். நீதிமன்ற மண்டபமே சிரிப்பில் மூழ்கித் தத்தளித்தது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசபதியின் ‘தமிழ் நாவல் இலக்கியமும்’ சாமிநாதனின் கட்டுரையும்

எம். ஏ. நுஃமான்

சாமிநாதன் சிறுபிள்ளைத் தனமாக இவ்வாறு குழப்பத் தேவை இல்லை. பௌதீக விஞ்ஞானம் புதிதாகக் கண்டுபிடிக்கும் அனைத்தையும் தன்னுள் அடக்கி வளர்ந்தே வந்துள்ளது. இனியும் அவ்வாறுதான் வளர்ச்சியடையும். மாக்ஸியமும் அப்படியே. மாறிவரும் புதிய நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அது வளர்ந்தே வந்துள்ளது. இனியும் அவ்வாறு வளர்ச்சியடையும். மாக்ஸீயத்தின் அடிப்படையான இயக்கவியல், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் அதைத்தான் நமக்குக் கற்பிக்கின்றது. சாமிநாதன் போன்ற இயக்க மறுப்பு வாதிகளுக்கு எல்லாமே குழப்பமாகத் தான் தோன்றும். குழம்பித் தவிப்பது அவர்களின் இயல்பு. அவர்கள் தங்களுக்குள்ளே குழம்பிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக மற்றவர்களையும் குழப்ப முன்வருவதுதான் தவறு.

மாக்ஸீயம் காலாவதியாகி விட்டது என்ற சாமிநாதனின் கருத்து அர்த்தமற்ற, சிறுபிள்ளைத்தனமான ஒரு வெற்றுக் கோஷம் என்பதையும், கண் மூடிக் கொண்ட பூனையின் பாங்கில் சாமிநாதன் உலகத்தை நோக்குகின்றார் என்பதையும் பார்த்தோம். இனி சாமிநாதனின் மூன்றாவது கண்டுபிடிப்புக்கு வருவோம். மாக்ஸீயம் ‘ஒரு மூடுண்ட வளர்ச்சி மறுக்கப்பட்ட ஒரு அமைப்பு’ என்பது அவரின் கண்டுபிடிப்பு. ‘உண்மையில் எந்த விஞ்ஞானமும் அறிவுத் துறையும் ஒரு மூடுண்ட அமைப்பாக இருக்க முடியாது. ஆனால் மாக்ஸின் சித்தாந்த அமைப்பு, அது பிறந்த நாளில் இருந்து இதுவரை ஏற்பட்டுள்ள எத்தகைய துறை வளர்ச்சிகளையும் மாறுதல்களையும் எதிர் கொண்டதும் இல்லை; அவற்றைக் கண்கொண்டு பார்த்ததும் இல்லை. அவை ஏதும் இச் சித்தாந்தத்தைப் பொறுத்தவரை நிகழாதவை. “ஒரே வரியில் 1848-க்குப் பிறகு உலகம் சிலையாகி நின்றுவிட்டது மாக்ஸிய வாதிகளின் நோக்கில்’’ என்று சாமிநாதன் சொல்கிறார். இதில் உண்மை இருக்கிறதா என்று பார்ப்போம்.

மாக்ஸியத்துக்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று அதன் தத்துவ ரீதியான பகுதி; மற்றது செயல்முறைப் பகுதி என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். இயக்கவியல் — வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மாக்ஸியத்தின் தத்துவ ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாகும். சமூகத்தையும் சமூக மாற்றங்களையும் புரிந்து கொள்வதற்கும் செயல்முறைக் கோட்பாடுகளை வகுப்பதற்கும் இந்தத்துவம் வழிகாட்டுகின்றது. சமூகம் இடையருது மாறுகின்றது என்றும் இம்மாற்றங்களுக்கு ஏற்ப செயல்முறைகளையும், செயல்முறைக் கோட்பாடுகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் கற்பிக்கின்றது. இவ்வகையில் வேறுபட்ட சமூகச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சமுதாய வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப மாக்ஸியக் கோட்பாடுகளும் வேலைத் திட்டங்களும் மாறுதலும் வளர்ச்சியும் அடைகின்றன. மாக்ஸியத்தின் வரலாறு இதையே காட்டுகின்றது. மாக்ஸ் தன் வாழ் நாளிலேயே தனது நடைமுறைக் கோட்பாடுகள் பலவற்றை மாற்றி அமைத்தார். மாக்ஸுக்குப் பிறகு லெனினும், மாஓவும் தங்கள் காலச் சூழல்களுக்கு ஏற்ப மாக்ஸியத்தை மேலும் வளர்த்தனர். 'மாக்ஸியம் ஒரு வரட்டுக் கோட்பாடு அல்ல, அது செயலுக்கான வழிகாட்டி மட்டுமே' என்றே எல்லா மாக்ஸிய வாதிகளும் கருதுகின்றனர். எல்லாம் எப்பொழுதும் மாற்றம் அடைகின்றன என்ற கோட்பாட்டைத் தவிர மாக்ஸிஸ்டுகளைப் பொறுத்தவரை மாருத வளராத எதுவும் இல்லை. இயக்கவியல் தத்துவத்தைப் படித்திருந்தால் சாமிநாதனுக்கு இது விளங்கி இருக்கும்.

'இயக்க இயல் வகைத் தத்துவ ஞானத்துக்கு, இறுதியானதோ, பரமமானதோ, புனிதமானதோ எதுவுமே கிடையாது. ஒவ்வொரு பொருளினது தற்காலிகத் தன்மையையும் அது வெளிப்படுத்துகின்றது. உருவாகிக் கொண்டும் மறைந்து கொண்டும் இருக்கின்ற, கீழ் நிலையில் இருந்து மேல்நிலைக்கு முடிவில்லாமல் ஏறிச் சென்ற படியே இருக்கின்ற, இயக்கப் போக்கு ஒன்றைத் தவிர வேறு எதுவும் அதன் முன் நிலைத்து நிற்க முடியாது. மேலும் இயக்கவியல் வகைத் தத்துவ ஞானம் என்பதே சிந்திக்கும் மூளையில் தோன்றும், இந்த இயக்கப் போக்கின் பிரதிபிம்பமே தவிர வேறு இல்லை' என்ற ஏங்கல்ஸின் கூற்றை (பார்க்க: லுத்விக் போயபார்க்) இங்கு நினைவு படுத்துவது பொருத்தமாக இருக்கும். முடிந்த முடிபான, எதற்கும் கட்டுப்படாத மாற்றத்துக்கு உட்படாத எதுவும் இல்லை என்பதே இதன் அர்த்தமாகும். ஏங்கல்ஸ் பிறிதொரு இடத்தில் பின்வருமாறு எழுதினர்: 'விஞ்ஞானம் கண்டுபிடிக்கும் புதிய விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒத்ததாக இருக்கும் வண்ணம் பொருள் முதல் வாதம் அவ்வப்போது புதுப் புது அம்சம் உடையதாக ஆகவேண்டும்' இவ்வாறு பொருள் முதல் வாதத்தைப் புதிய அம்சம் உடையதாக ஆக்கும் காரியத்தை 'பொருள் முதல் வாதமும் அனுபவ ஞான விமர்சனமும்' என்ற நூலில் லெனின் சாதித்தார். அதன் பிறகு வெளிவந்த மாஓவின் 'நடைமுறைபற்றி', 'முரண்பாடு பற்றி' ஆகிய தத்துவார்த்தப் படைப்புக்கள் அறிவுபற்றிய மாக்ஸியக் கோட்பாட்டையும், இயக்கவியலின் முரண்பாடு பற்றிய விதியையும் மேலும் வளப்படுத்தின. ஆனால் கண்ணை மூடிக் கொண்டிருக்கும் சாமிநாதனே 'மாக்ஸீய வாதிகளின் நோக்கில் 1848-க்குப் பிறகு உலகம் சிலையாகி நின்றுவிட்டது' என்று கூறுகிருர். கம்யூனிஸ்ட் கட்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைக்கு மாக்ஸும் ஏங்கல்சும் எழுதிய முன்னுரைகளை ஒரு முறை தட்டிப் பார்த்தாலே சாமிநாதன் எவ்வளவு கேலிக்கிடமான கருத்தைக் கூறுகிறார் என்பது புலப்படும். 1872-ம் ஆண்டின் ஜேர்மானியம் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் அறிக்கையில் உள்ள 10 அம்சத் திட்டம்பற்றி அவர்கள் பின் வருமாறு எழுதினர்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நவீன தொழில் பிரமாதமான முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது. அவற்றுடன் கூடவே தொழிலாளி வர்க்கத்தின் கட்சி ஸ்தாபனம் விரிவடைந்தும் சீர்பட்டும் வருகின்றது. இந்த நிகழ்ச்சிகளையும் இவற்றுடன் கூட முதலில் பிப்ரவரிப் புரட்சியிலும் பிறகு அதற்கும் மேலாக, பாட்டாளிவர்க்கம் முதன் முதலாக இரண்டு முழுமாதங்கள் அரசியல் அதிகாரத்தைத் தன்வசப் படுத்திக் கொண்டிருந்த பாரிஸ் கம்யூனில் கிடைத்துள்ள நடைமுறை அனுவத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், சில விபரங்களில் இந்த வேலைத் திட்டம் காலாவதியாகிவிட்டது என்பது விளங்கும்......... பல்வேறு எதிர்க் கட்சிகளுடன் கம்யூனிஸ்டுகளுக்குள்ள உறவுகள் பற்றிய குறிப்புக்கள் (நான்காவது பகுதி) கோட்பாட்டு ரீதியில் இன்றும் சரியானவையாக இருப்பினும் நடைமுறையில் அவை வழக்கொழிந்தவையாகிவிட்டன என்பது வெளிப்படை. ஏனென்றால் அரசியல் நிலைமை முழுமையும் மாறிவிட்டது. சரித்திரத்தின் முன்னேற்றம் அங்கு குறிப்பிட்டுள்ள அரசியற் கட்சிகளில் பெரும்பாலானவற்றை வழித்தெறிந்து விட்டது' கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளிவந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உள்ளேயே மாக்ஸ் எவ்வளவோ மாறுதல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டு விட்டது. ஆனால் சாமிநாதன் சொல்கிறார் 'மாக்சீய வாதிகளைப் பொறுத்தவரை 1848-க்குப் பிறகு உலகம் சிலையாகி நின்றுவிட்டது என்று. உண்மை மறுபக்கத்தில்தான் இருக்கின்றது.

சாமிநாதனைப் பொறுத்தவரை உலகம் சிலையாகி நின்று விட்டது என்பதுதான் உண்மை. கருத்துமுதல்வாத, மாறா நிலைவாத உலக நோக்கை விட்டு அவரால் வெளிவர முடியவில்லை என்பதுதான் உண்மை. மாறி வரும் உலகை அவரால் அங்கீகரிக்க முடியவில்லை என்பதுதான் உண்மை. ஆனால் மாக்ஸீய வாதிகளைப் பொறுத்தவரை உலகம் சதா மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும்தான் உள்ளது. அதனால் மாக்ஸுடன் அவர்கள் நின்றுவிடுவதில்லை. மாக்ஸின் எதிர்கால முன் உணர்வு பற்றிய எல்லைப்பாடுகளை அவர்கள் அறிவர். இதை விளக்குவதற்கு நான் இன்னும் சில விஷயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

மாக்ஸ் சமுதாயத்தின் வளர்ச்சி விதிகளைக் கண்டுபிடித்த மகத்தான பெருமைக்குரியவர். எனினும் தனக்குப் பிறகு வரக்கூடிய சகல நிலைமைகள் பற்றியும் முன் அறிவு பெற்ற அமானுஷ்யரல்லர். எந்த ஒரு மனிதனின் அறிவும் அவனது சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டது என்ற மாக்ஸிய விதிக்கு மாக்ஸ் மட்டும் விலக்கானவர் அல்ல. முதலாளித்துவத்தின் வாலிபப் பருவத்தில் அவர் வாழ்ந்தார். தன் காலத்தைய கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் ஏகபோகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் என்பதை அவர் ஓரளவு முன் உணர்ந்திருந்தார். ஆனால் மாக்ஸுக்குப் பிறகு முதலாளித்துவம் சர்வதேச முதலாளித்துவமாக — ஏகாதிபத்தியமாக— வளர்ந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அரசியல் விதிகளை எல்லாம் அவரால் முன்கூட்டியே திட்டமாக விளக்கி இருக்க முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியம் அப்போது தோன்றி இருக்கவில்லை; அதாவது ஏகாதிபத்திய நடைமுறை அப்போது இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வாழ்ந்து நேர்முக அனுபவம் பெறாத, அந்தச் சூழ்நிலைக்குரிய போராட்டங்களில் கலந்துகொள்ளாத எந்த ஒரு மேதையாலும் அந்தச் சூழ்நிலைக்குரிய விதிகளைத் திட்டமாக வகுக்க முடியாது. இறந்தகாலத்தைப்பற்றி அல்லது தூர உள்ள ஒன்றைப் பற்றி நாம் இப்போது விளங்கிக் கொள்ளவும் விளக்கவும் முடிகின்றதென்றால் அதற்குக் காரணம் அக்காலத்தில், அவ்விடத்தில் வாழ்ந்தவர்களின் நேர்முக அனுபவத்தின் தொகுதிகளை நாம் தரவாகப் பெறக்கூடியதாக இருப்பதே. இவ்வகையில் ஏகாதிபத்திய காலகட்டத்தில் வாழ்ந்த லெனினாலேயே ஏகாதிபத்தியத்தின் விதிமுறைகளைத் திட்டமாக வகுக்க முடிந்தது. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என்ற நூலில் லெனின் அதைச் சாதித்தார். இவ்வகையிலேயே லெனினது கோட்பாடுகள் ஏகாதிபத்திய காலகட்டத்தின் மாக்ஸியமாக வளர்ந்தன. அறிவு பற்றிய மாக்ஸீயக் கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளாதவர்களால் இதைப் புரிந்து கொள்வது சாத்தியம் அல்ல. கால வளர்ச்சியை ஒட்டி மாக்ஸின் சில கருத்துக்களை நிராகரித்து லெனின் எவ்வாறு மாக்ஸியத்தை வளர்த்தார் என்பதற்கு இரண்டு உதாரணங்களை மட்டும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருந்தும் என்று நினைக்கின்றேன்.

1870 - 80-ம் ஆண்டுகளில் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் பூர்ஷ்வா வர்க்க ஜனநாயகம் சிறிது சிறிதாகப் பரிணமித்து தொழிலாளி வர்க்க ஜனநாயகமாக மாறக் கூடும் என்று மாக்ஸ் கருதினார். பிற்காலத்தில் லெனின் இதை நிராகரித்து பின் வருமாறு எழுதினார். 'அந்த நாடுகளைப் பற்றி மாக்ஸ் எழுதிய விஷேச குறிப்பு முதலாவது ஏகாதிபத்திய மகாயுத்த சகாப்தமாகிய இற்றைக்கு 1917-ம் ஆண்டில் காலாவதியாகிவிட்டது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஆங்கிலோ சாக்சன் சுதந்திரத்துக்கு உலக அரங்கில் மிகப் பெரிய கடைசிப் பிரதிநிதிகள் என்பது உண்மையே. அதாவது இராணுவ வெறியும் அதிகார வர்க்க ஆணவமும் அந்நாடுகளில் இல்லாதிருந்தன. ஆனால் இன்றைக்கு அவற்றை அவ்வாறு கருதுவதற்கில்லை. இற்றைக்கு ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள இராணுவ வெறியும் அதிகார வர்க்க ஆணவமும் கொண்ட அமைப்புக்களை அவையும் உண்டுபண்ணிக் கொண்டன. அந்த அமைப்புக்கள் சகலத்தையும் அடக்கித் தமக்கு அடிமை ஆக்குகின்றன. சகலத்தையும் காலில் போட்டு மிதித்துத் துவைக்கின்றன. ஆகவே இன்றைக்கு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உண்மையான பொதுஜன வெற்றி பெறுவதற்கு அந்த நாடுகளில் (1914 முதல் 1917-க்குள் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் இராணுவ அதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க யந்திரத்தின் சிறப்புக்குச் சரிசமமாக வளர்க்கப் பட்டு) அமைக்கப்பட்டுள்ளதும் தயாராக இருப்பதுமான அரசாங்க யந்திரத்தை உடைத்துத் தூள் தூளாக்க வேண்டியதும் ஒரு பூர்வாங்க நிபந்தனையாகின்றது"

1840 - 70-ம் ஆண்டுகளில் போலந்தின் சுதந்திரக் கோரிக்கையை செயல் பூர்வமாக ஆதரிப்பது மேற்கு ஐரோப்பிய ஜனநாயகம் முழுவதின் கடமையும், அதற்கு மேலாக சோஷல்-டெமாக்கிரஸியின் கட்டாயக் கடமையும் ஆகும் என்று மாக்ஸும் ஏங்கல்சும் கருதினார்கள். இது பற்றி லெனின் கூறுவதையும் இங்கு தருவது பொருந்தும். '1840 ஆண்டுகளிலும் 60-ம் ஆண்டுகளிலுமான காலகட்டங்களுக்கு, இவைகள் ஆஸ்திரியாவிலும், ஜேர்மனியிலும் பூர்ஷ்வா புரட்சிகளின் காலம், ரஷ்யாவில் விவசாயச் சீர்திருத்தக் காலம், இந்த நோக்கு நிலை மிகவும் சரியானது. இதுமட்டும் தான் முரண்பாடற்ற ஜனநாயக ரீதியானது. பாட்டாளி வர்க்க ரீதியானது ..... ஆனால் 1840-ல் இருந்து 1870 வரை அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதிக்குப் பொருந்திய மாக்ஸின் நோக்கு நிலை இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய பொழுது பொருந்தாது போய்விட்டது...... வேறு ஒரு காலகட்டத்தில் மாக்ஸ் கொண்டிருந்த நோக்கு நிலையை எல்லாக் காலத்துக்கும் பொருந்துவது என நிலைநாட்டுவதற்கு போலிஷ் சோஷலிஸ்ட் கட்சி 1896-ல் முயன்றது. இது மாக்ஸீயத்தின் பொருளை விட்டு விட்டு வரிவடிவத்தை மட்டும் ஏற்றுக் கொள்வதாகும்'

காலம் இடம் என்பவற்றைப் பொறுத்து கோட்பாடுகள் மாற்றம் அடையும் என்பதை கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையிலேயே மாக்ஸ் சுட்டிக் காட்டினார். அறிக்கையில் கூறப்பட்ட 10 அம்ச வேலைத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் 'இந்தக் கோட்பாடுகளை நடைமுறையில் கடைப்பிடிக்கும் விஷயம், எந்த இடத்திலும் சரி எந்தக் காலத்திலும் சரி அந்த அந்தக் கால கட்டத்தின் சரித்திர பூர்வமான நிலைமைகளைப் பொறுத்திருக்கின்றது' என்று 1872-ல் எழுதிய முன்னுரையில் அவர் குறிப்பிட்டார். இது மிக முக்கியமான ஒரு கருத்து ஆகும். இவ்வகையிலேயே இயக்கவியல் தத்துவத்தின் வழிகாட்டலில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த புகழ்பெற்ற மாக்ஸிய வாதிகள் மாக்ஸியத்தைத் தங்கள் நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றமாதிரி வளர்த்தனர்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? மாக்ஸியம் வளர்ச்சி மறுக்கப்பட்ட ஒரு மூடுண்ட தத்துவம் என்பதையா? மாக்ஸிய வாதிகளைப் பொறுத்தவரை 1848-க்குப் பிறகு உலகம் சிலையாகி நின்றுவிட்டது என்பதையா காட்டுகின்றன? இல்லை. மாக்ஸியம் ஒரு வளரும் தத்துவமாக, வளர்ச்சிக்கு வழி காட்டும் தத்துவமாக, தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வரும் ஒரு தத்துவமாக இருக்கின்றது என்பதையே காட்டுகின்றன. 'உலகின் புறநிலை யதார்த்தம் மாற்றம் அடைகின்ற இயக்கப் போக்கு ஒரு போதும் முடிவடைவதில்லை. அதனால் நடைமுறை மூலம் மனிதன் உண்மையைப் பெற்றுக் கொள்வதும் முடிவடைவதில்லை.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டில்

ஏ. பி. வி. கோமஸ்

ஜேமிஸ் பாஸ் என்றால் அந்தக் கிராமத்தில் எவருக்கும் தெரியும். அது ஒரு சிறு கிராமந்தான். வழிவழி வந்த குடும்பங்கள் வாழ்ந்து வரும் கிராமம். பெரிய நகரங்கள்போல் 'இன்றிருப்பார் நாளையில்லை' என்று மாற்றத்தில் போவது இல்லை. இந்தக் கிராமத்தில் மாற்றம் என்றால் 'மறு உலக' மாற்றத்தில்தான் செல்வார்கள். மற்றப்படி அந்தக் கிராமத்தில் இருந்து கொண்டே தம் குலத் தொழிலைச் செய்து வருவதில் ஆர்வமும் ஆனந்தமும் கொள்கின்றவர் அந்தக் கிராமத்து மக்கள்.

ஜேமிஸ் பாசுக்கு இப்போது ஐம்பத்து மூன்று வயதாகின்றது. எதிர்வரும் பங்குனியில் என்றார் அவர். ஆனால் சரியாகத் தெரியாது.

ஜேமிஸ் பாஸ் பொதுவாக 'பாஸுனே' என்று செல்லமாக அழைக்கப்படுவர். அவரின் பொதுவான தொழில் மரத்தால் பொருள்கள் செய்யும் தச்சுத் தொழில் என்றாலும், அவர் கட்டில்கள் செய்வதில் ஒரு கைதேர்ந்த தச்சனாராகக் கணிக்கப்பட்டார். ஆங்கிலத்தில் கூறுவதாய் இருந்தால் 'ஏ-ஒன் எக்ஸ்பேர்ட்' ஜேமிஸ் பாஸ் செய்த கட்டில் என்றால் கேட்க வேண்டியதில்லை. வேலை அவ்வளவு சுத்தம்.

அநேகமாக அக்கிராமத்தை அடுத்திருந்த நகரங்களில் பெரிய வீடுகளில் எல்லாம் ஜேமிஸ் பாஸ் செய்த கட்டில்களே காட்சியளித்தன. ஒரு தலைமுறையினர் உபயோகித்து மறு தலைமுறையினர் உபயோகிப்பது மட்டுமல்ல, அநேகமான கட்டில்கள் மறுதலைமுறையை உருவாக்குவதற்கும் உறுதுணையாய் இருந்திருக்கின்றன. இரட்டைக் கட்டில் செய்து கொடுத்த பலருக்கு பத்துப் பதினொரு ஆண்டுகளில் ஒற்றைக் கட்டில்களும் செய்து கொடுத்துள்ளார் ஜேமிஸ் பாஸ். ஜேமிஸ் நடைபழகும் போதே— மரத்துண்டுகளையும் ஆணிகளையும் பாட்டனாருக்கும், தந்தையாருக்கும் பொறுக்கிக்கொடுத்து பின் பதினைந்து பதினாறு வயதில் வேலைசெய்யத் தொடங்கி இருபது வயதில் கட்டில் செய்யத் தொடங்கிய கைதேர்ந்த தச்சர் ஜேமிஸ் பாஸ். ஆனால் அவர் சுமார் முப்பத்தைந்து ஆண்டு காலமாக கட்டில் செய்து வந்துள்ளார்.

எனக்கும் அவரைத் தெரிய வந்தது, நான் என் ஆசிரியத் தொழில் செய்யும் பொருட்டு மாற்றமாகி வந்தபோதுதான். புதிதாக எடுத்த வீட்டுக்கு ஒரு கட்டில் தேவைப் பட்டது. ஜேமிஸ் பாஸைப் பற்றி கேள்விப்பட்டு, சென்று கேட்டபோது தான் பழக்கமானேன்.

★

இப்போது அவர் வாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். துணைக்கு எவருமில்லை. மனைவியும் அவரின் கணக்குப்படி சென்ற எலக்‌ஷனுக்கு முன்னால் இறந்துபோனாள். மகன் ஒருவன் இருந்தான். எஸ். எஸ். ஸி. படித்தபிறகு யாரோ ஒரு குட்டியைக் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டதாகச் சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்யலாம்? இப்போது வாதநோயால் வேதனைப் படுகிறார். அவரின் வேலைத்தலமும் தன் சிறு குடிலுக்கருகில் தான் இருந்தது. நான்கு மரத் தூண்கள் நாட்டப்பட்டு கூரையிடப்பட்டிருந்தது. வயலுக்குப் பக்கத்தில் இருந்ததால் நிலம் ஈரலிப்பாகக் காணப்பட்டது. வீட்டின் உள்ளும் ஈரம் கசிந்தது ஆனால்—

வாதத்தால் பாதிக்கப்பட்டு வேதனைப்பட்ட ஜேமிஸ் பாஸ் அண்டி வந்தவர்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான கட்டில்களைச் செய்து கொடுத்த ஜேமிஸ் பாஸ், வேலை செய்யச் சக்தியற்று வேதனைப்பட்ட ஜேமிஸ் பாஸ், தரையில் படுத்துக் கிடந்தார்!

படுக்கையில் விழுந்து ஒரு மாதகாலமிருக்கலாம். மிகவும் பாதிக்கப்பட்டு விட்டார். அவரின் குடிலுக்குப் பக்கத்திலிருந்த பொடிஹாமினிதான் ஏதோ வேளா வேளைக்கு உதவி செய்தாள். அவளும்தான் எத்தனை நாளைக்குப் பார்ப்பாள். தூரத்து உறவு என்றாலும் எத்தனை நாளைக்குத்தான் தாக்குப்பிடிக்க முடியும். சொந்தத் தனது குடும்பத்தையே பாதுகாத்துக் கொள்ள முடியாத அந்தக் கைம்பெண்ணும்தான் என்ன செய்வாள். அவள் இவ்வளவு செய்ததே பெரிய காரியம்.

ஜேமிஸ் பாஸ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார். அங்கு கிடக்கும் கட்டில்களைவிட நோயாளிகளின் தொகை அதிகம். எனவே......

நாதியற்ற ஜேமிஸ் பாசும் தரையில்தான் கிடந்தப்பட்டார். கட்டில் வடித்தவருக்கு காட்டாந்தரைதான் தஞ்சம்.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பத்துநாட்கள் கழிந்தன.

ஜேமிஸ் பாஸ் இறந்துவிட்டதாகக் கிராமத்து மக்கள் பேசிக்கொண்டார்கள். நான் சென்று பார்த்தேன்.

அவரின் பூதவுடல்... பிணம் வைக்கும் அறையில் நாதியற்றவர் என்ற எண்ணத்தாலோ என்னவோ தரையில்தான் கிடந்தது! ★


மல்லிகை

புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 10-00 |
| தனிப்பிரதி | -75 |
| இந்தியா, மலேசியா | 12-00 |

(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குள்ளநரியும் கௌதாரியும்

ஒரு கௌதாரி சிறு குன்றின் மீது உட்கார்ந்து உரக்கப் பாடிக்கொண்டு இருந்தது. இதனைத் தொலைவிலிருந்து ஒரு குள்ளநரி பார்த்துவிட்டது. குள்ளநரியோ பல நாட்களாகப் பட்டினியாக இருந்தது. பசியால் கல்லைக்கூடச் சாப்பிடும் நிலைக்கு அது வந்துவிட்டது. இத்தருணத்தில்தான் குள்ளநரி கௌதாரியைப் பார்த்துவிட்டது. கேட்க வேண்டுமா?

'கௌதாரி சிறிதுதான். இருந்தாலும் சுவையாக இருக்குமே!'

கௌதாரியை நெருங்கி நரி கூறியது:

'அன்பார்ந்த கௌதாரியே, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்! உன் குரல் எத்தனை பிரமாதமாக இருக்கிறது தெரியுமா! ஆனால் நீ ஏன் எப்போதும் ஒரு குன்றின்மீது உட்கார்ந்து கொண்டே பாடுகிறாய்? கீழே இருப்பவர்கள் உன் பாட்டைக் கேட்டு ரசிக்க முடியாதே'

'நாங்கள் எப்பொழுதும் இங்கு உட்கார்ந்து பாடுவது இல்லை. ஒருநாளைக்கு ஒருமுறை நாங்கள் உண்மையிலேயே பாட வேண்டும் என்று நினைக்கும் பொழுதுதான் இங்கு வந்து பாடுகிறோம்' என்று பதில் அளித்தது கௌதாரி.

'ஆனால் நான் உன்னை எப்பொழுதும் இங்குதானே பார்க்கிறேன். நீ தூங்கக்கூடப் போவதில்லையே' என்றது குள்ளநரி.

'இல்லையே. நானும் எல்லோரையும் போல் தூங்குகிறேனே' என்று பதிலளித்தது கௌதாரி.

'இல்லை இல்லை. நீ கூறுவதை நான் நம்பமாட்டேன். நீ தூங்குவது இல்லை'

'ஐயோ, தூங்காமல் எப்படி இருக்க முடியும்? தூங்காமல் இருக்க முயற்சி செய்தாலும் கூட கடைசியில் தூக்கம் வந்து விடுமே!'

'அப்படியானால் இப்போது என் எதிரில் தூங்கிக் காட்டு. நானே என் கண்களால் அதைப் பார்த்தால்தான் நம்ப முடியும்'

உடனே கௌதாரி கீழே இறங்கி வந்து, தனது தலையை இறக்கைகளுக்கு இடையில் வைத்து மூடிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசை திருப்பல்

புதிய உலகைக்
காணத் துடித்த
கிளி.........
கூண்டுள் ளிருந்து
சிறகடித்தது...!
எஜமான்—
வாழைப் பழத்தை
வைத்து மடக்கினுன்!

பாலமுனை பாறூக்

## சமூக அமைப்பு

பங்களாவின் முன்னுலே
பயனற்ற
உரம் உறிஞ்சும்
பூஞ்செடிகள்
பின் வளவில்
பயனுள்ள ஊட்டம்தரும்
பயிர் வகைகள்.

'ஜெயம்'

அதற்காகக் காத்துக் கொண்டிருந்த குள்ளநரி உடனே கௌதாரியைக் கௌவிப் பிடித்தது. கௌதாரி தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்டது. இருப்பினும் காலம் கடந்துவிடவில்லை. தனது தலையை குள்ளநரியின் வாயிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டு கௌதாரி குள்ளநரியிடம் கேட்டது:

'சகோதரரே, நான் சுவையாக இருப்பேனே, நீங்களே சொல்லுங்கள்'

நரியோ தலையை மட்டும் அசைத்தது.

வியப்புடன் கௌதாரி மறுபடியும் கேட்டது.

'உன்னைப் போன்ற புத்திசாலியான வேட்டைக்காரர்கள் வேட்டையாடும் போது கவனிக்க வேண்டிய சட்டங்களை அறியாமல் எப்படி இருக்க முடியும்? வேட்டைப் பொருளைப் பிடித்தவுடன் அதனை நீங்கள் புகழ வேண்டாமா?'

அதற்கும் பதில் இல்லை. குள்ளநரி தலையை மட்டும் அசைத்தது.

'சரி, என்னைச் சாப்பிடுவதற்கு முன்பு எனது கடைசி விருப்பத்தை பூர்த்தி செய். நீ என்னைப் புகழ்ந்து பேசும்போது அதைக் கேட்கவேண்டும் என்று எனக்கு ஆசை. அதன் பிறகு உனக்கு நன்கு ஜீரணமாகட்டும் என்று நான் வாழ்த்துவேன்' என்றது கௌதாரி.

குள்ளநரி வாயைத் திறந்தது. ஆனல், ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அதற்குள் கௌதாரி இறக்கையை உயர்த்திப் பறந்துபோய் குன்றின் மீது உட்கார்ந்து கொண்டது. அங்கிருந்து குள்ளநரியைப் பார்த்தது.

குழப்பமடைந்த குள்ளநரி ஓலமிட்டது.

'சகோதரியே, கௌதாரி, அருமைச் சகோதரியே' என்று கெஞ்சியது.

'இது என்ன சகோதரரே! இதை விடும். இதற்காக வெட்கப்பட வேண்டாம், நான் நரியுமல்ல, நீங்கள் கௌதாரியும் அல்ல'

'உன் அதிர்ஷ்டம்தான் என் வயிலிருந்து நீ தப்பிவிட்டாய். தான் சாப்பிடும் முன்பு, சாப்பாட்டை எவன் புகழ்கிருனே, அவனுக்கு அதிர்ஷ்டமே இருக்காது என்று குள்ளநரி வருத்தத்துடன் கூறியது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடிதங்கள்

இனாயத்துள்ளாவின் விமர்சனம் படித்தேன். வற்றாளை, மரவள்ளி என்ற சின்ன விஷயத்தை வைத்துக்கொண்டு சம்பந்தமில்லாத செய்திகளை எல்லாம் — சொந்த வயிற்றெரிச்சலையும் சேர்த்துக் கொட்டியிருக்கிறார்.

'பெட்ரைம் ஸ்ரோரிகளை'ப் படித்துப் பழக்கப்பட்டுப்போன இனாயத்துள்ளா போன்றோரும், அவரது வர்க்கமும் இத்தகைய கதைகளைக் கண்டால் வெகுண்டெழுவதில் ஆச்சரியமில்லை. ஈழத்தில் இன்றும்கூட தொழிலாளர் வர்க்கம் வேலை நிறுத்தம் செய்ய முனையும் துரதிர்ஷ்ட நிலைகளைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இனாயத்துள்ளாவின் 'பொது அறிவு' பின்தங்கியுள்ளதா?

இல்லாவிட்டால் இலங்கையில் தொழிளாளர்கள் சகல உரிமைகளும் பெற்று சொர்க்க வாழ்வு வாழ்வதாக அவர் கற்பனாவாதம் பேச முன்வந்திருக்க மாட்டார். ஈழத்துக் கிராமப் புறங்களிலே ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வர்க்க உணர்வு பெறாத நிலையில் முதலாளி வர்க்கத்தால் பழிவாங்கப் படுகிறார்கள். இந்த நிலையில் இக்கரு பொருத்தமற்றது என்று வழக்காட வந்த இனாயத்துள்ளாவின் கூப்பாடு பைத்தியக்காரத்தனமானது!

இது புளித்துப்போன கரு என்று கூற முன்வந்த இவர் கிராமத்து முஸ்லிம் பெண்கள் தொழிற்சங்க ரீதியில் ஒன்று படத் தூண்டும் கதைகள் எத்தனை படித்துள்ளார்? பட்டியல் தருவாரா?

கதையில் வலியுறுத்தப்பட்ட கருத்து இனாயத்துள்ளா போன்றோருக்கு பிடிக்காதது உண்மை. இன்றுள்ள சமூக ஏற்றத் தாழ்வும், வர்க்கப் பிரிவினையும் தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று விரும்புகிறவர்கள் எத்தகைய விலாங்கு வேஷம் போட்டாலும்கூட அவர்களை அறியாமலே தங்கள் வர்க்க பாசத்தைப் பிரதிபலிக்கவே செய்வார்கள். இனாயத்துள்ளாவின் விசர்மனமும் இதனையே சாருகிறது.

ஒரு காலத்திலே முஸ்லிம்கள் மத்தியில் இன்ஸான்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக ஜிஹாத் செய்ய முன் வந்து மூக்குடைபட்ட பேர்வழிகள் முற்போக்குக் கதைகளுக்கு எதிராக எந்த உருவத்தில் வந்தாலும் முகம் கொடுக்க மக்கள் தயாராய் இருக்கிறார்கள்.

எம். எச். எம். சம்ஸ்,

திக்குவல்லை.

—★—

'கிராமத்தில் ஒரு சுவர் சாய்கின்றது' சிறுகதையில் வற்றாளை மரவள்ளியாக உருப்பெறுவதில் எந்த 'விநோத'மும் இல்லை. இரண்டும் ஒரே வகையான உணவுப் பொருட்கள்...... தற்செயலான மாறுபாடு; வாசிப்புப் பயிற்சியும் அனுபவமும் மிக்க எவரும் இதைத் தூக்கிப் பிடித்துக் கூத்தாடப் போவதில்லை. சரிப்படுத்தியே சிந்திப்பர்.

இதுதவிர, சட்ட திட்டங்களில் தொழிலாளர்க்கான பாதுகாப்பு அமைந்தபோதும் நடைமுறையில் இது எந்த விதத்திலும் இன்றுவரை வெற்றியளிக்காததாகவே இருந்து வருகின்றது. இந் நிலையில் தொழிலாளர்கள் தமது போராட்ட உணர்வுகளை வெளிக் காட்டுவதன் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். இதை, இரு வேறு இனத் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலையில் சுரண்டல் நலத்துக்காக இனவாதம் பேசும் யதார்த்தத்தைத் தாண்டி, ஒன்றுபடும் வர்க்க உணர்வைச் சித்தரிக்கும் அக்கதை எந்தவிதத்திலும் பொருத்தமற்றதல்ல; புளித்து போனதுமல்ல!

'முதலாளித்துவ அரசியலில் அவதியுறும் தொழிலாளர் மத்தியில் எழுதப்பட வேண்டிய கதை இது' என்று குறிப்பிடுவதன் மூலம் 'இங்கு தொழிலாளர் மகிழ்ச்சியுடன் வாழும் அரசு அரசோச்சுகிறது' என்ற மறை குரல் எழுப்பப்படுகின்றது. இது தொழிலாளர்களின் உணர்வுகளையும் வர்க்க இலக்கிய முனைப்புகளையும் மழுங்கடிக்க இயங்கும் முதலாளித்துவப் பிற்போக்குக் கும்பலின் படுபயங்கரமான ஓங்காரத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

போதாக்குறைக்கு 'பெட்ரைம் ஸ்ரோரீஸ்' என்ற முத்திரையும் குத்தப்படுகின்றது. உண்மையில் கற்பனுவாத — இன்ப மூட்டல் -- காதல், காமச் சித்தரிப்பைக் கொண்டெழுதப் படுபவையே 'பெட் ரைம் ஸ்ரோரீஸ்' ஆகும். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கு முடிச்சுப் போட முனைவதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கிறது.

எல்லாவற்றையும்விட, இத்தகைய கதைகள் 'மல்லிகை'யின் தூய்மைக்கு கரும்புள்ளிகள்என்ற தாழ்மையான கருத்தும் வேறு முன்வைக்கப் படுகின்றது. தொழிலாளர்களையும், உண்மை இலக்கிய நெஞ்சங்களையும் புண்படுத்தும்... இனயத்துள்ளாஹ் போன்றவர்களின் கடிதங்களைப் பிரசுரிப்பதுதான் கடந்த பத்தாண்டுகளாக உழைக்கும் வர்க்கத்திற்காகவே குரலெழுப்பும் மல்லிகைக்குக் கரும்புள்ளிகள் என்பது எனது துணிவான கருத்தாகும்.

திக்குவல்லை கமால்

—★—

நண்பர் சட்டநாதன் அவர்கள் 'பூரணிக் குழுவினரும் நானும்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கடிதத்தை நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க நேர்ந்தது : நானும் பூரணிக் குழுவில் ஒருவனுக இருந்தேனுகையால், அவர் கிளப்பிய கருத்துக்கள் எந்தவரை சரியானவை, நியாயமானவை என்பது பற்றிச் சொல்லவேண்டியது எனது கடமையாய் உள்ளது.

அவர் ஆரம்பத்திலேயே தனக்குள் முரண்பட்டுக் கொள்கிருர். அவர் சொல்கிருர்: 'பூரணி இலக்கியக் குழு மிக விசித்திரமான ஒன்று. இலக்கியமும் நட்பும் வெவ்வேருனவை, தொடர்பற்றவை என்பதை நிரூபணம் செய்த ஒன்று' எனக்கு இதில் விளங்காதது இதுதான்: இலக்கியமும் நட்பும் வெவ்வேருனவையல்ல ஒன்று, தொடர்புள்ளவை என்று, பூரணிக் குழுவினரோடு நேரும் அனுபவத்துக்கு முன்னர் எங்கு கற்றுக்கொண்டார்? இலக்கியம் பற்றிய இத்தகைய 'அற்புதக்' கோட்பாட்டை, சட்டநாதன் தானுகவே பூரணிக் குழுவினரோடு நேர்ந்த அனுபவத்துக்கு முன்னர் கண்டுபிடித்தாரா? 'இலக்கியமும் நட்பும் வெவ்வேருனவையல்ல, ஒன்று' என்பது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் ஒன்றுதான்.

இன்னும் சட்டநாதன் சொல்கிருர்:

முரண்பட்ட கருத்துள்ள இளைஞர் சிலர் 'நட்பு' என்ற மகத்துவத்தை இணைசரடாகக் கொண்டு, நடுநிலையில் நின்று எக்கருத்துகளையும் பிரசுரிப்பது என்ற நல் நோக்குடன்தான் பூரணி இதழ் ஆரம்பிக்கப் பட்டது' இது உண்மைக்குப் புறம்பான கற்பனை என்பது ஒரு புறமிருக்க, இதில் தர்க்க வழுக்களும் அநேகம். முரண்பட்ட கருத்துள்ள இளைஞர்கள் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் என்ன நடக்கும்? முரண்பாடு அவர்களது அடிப்படைப் பண்பாக இருக்கிறபடியால், முரண்பாடு எழுவது தவிர்க்க முடியாதது தானே? ஆனுல் பூரணிக் குழுவினரிடையே உண்மையாக இருந்த முரண்பாடு இதுவல்ல. பூரணியினர் எல்லோரும் சர்வோதயக் கொள்கையின் அனுதாபிகளாகவே இருந்தனர். ஆனுல் அக்கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகளில் அவர்களிடையே முரண்பாடுகள் இருந்தன. அதனுல் தான் மு. த. பூரணிக்கு எழுதிய மூன்று விஷயதானங்கள் அடுத்தடுத்து நிராகரிக்கப்பட்டன. ஒருவேளை, சட்டநாதன் இன்றுவரை 'எக்கருத்தையும் பிரசுரிக்கும் ஒருவராகவோ நடுநிலையினின்று இயங்கியவராகவோ இருந்து வந்திருக்கலாம்' ஆனுல் 'நடுநிலை' என்பதற்கு அவர் தரப்பார்க்கும், (அல்லது அவரைப் போன்ற இன்னும் சிலர்) கருத்து என்ன? 'அது நல்லது' 'இது கூடாது' என்று அவர் பிரிக்கும்போது 'நல்லது' 'கூடாது' என்பதை எதன் அடிப்படையில் வைத்துத் தீர்மானிக்கிருர்? 'நடுநிலை' என்று எதையும் சுட்டாத ஒன்றிலா? இங்குதான் அவர் பார்வைக்கோளாறு வருகிறது.

'நடுநிலை' என்பது இதுவல்ல. ஒருவன் தான் வரிக்கும் ஒரு கொள்கைக் கேற்பத்தான் ஒன்றை 'நல்லது' 'கெட்டது' என்று தீர்மானிக்க முடியும். அப்படித் தீர்மானிக்கும்போது, எதிர்க் கருத்தாளனின் ஆக்கத்தில் (சிருஷ்டியில்) எதுவித அனுவசிய எதிர்மன முற்சாய்வுகள் இன்றி தனது கொள்கையின் வெளிச்சத்தில் அவன் குறைகளைக் காட்டலாம் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றலாம். அல்லது படைப்பாளியின் நோக்கிலிருந்தே அவனது படைப்புகளின் நன்மை தீமைகளை எதுவித அனுவசிய குரோதங்களுமின்றி ஆராயலாம். இதுவே நடுநிலையாகும். ஆனால் இவற்றைப் புரியும் ஒரு தரமுள்ள இலக்கிய கர்த்தாவின் கொள்கை மனித மேம்பாட்டுக்கு உதவுவதாகவும், அதேவேளை அவர் பிரசுரிக்கும் விஷயங்களும் அத்தகையனவாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் கி. வா. ஜகன்னாதனைக் கொண்டு நடிகைகளைப் பேட்டிகாண வைக்கும் குமுதங்களாகவே சட்டநாதனின் எக்கருத்தையும் பிரசுரிக்கும் இலக்கியப் போக்கு சீரழியும். ஆகவே இப்படியான, கருத்துக் கோளாறுடைய, சட்டநாதன் பூரணிக் குழுவிலிருந்து ஒதுக்கப்பட்டதிலோ, ஒதுங்கியதிலோ ஆச்சரியமில்லைத்தான். இப்படிப்பட்டவர் சமாதிக்கும் வாழ்வுக்கும் வித்தியாசம் தெரியாமல் தடுமாறுவதிலும் ஆச்சரியமில்லைத்தான்.

சட்டநாதன் சொல்லியிருப்பவை பல உண்மைக்குப் புறம்பானவை. பூரணி 'எக்கருத்தையும் பிரசுரிக்கும் நல்நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது' என்கிறார் சட்டநாதன். உண்மை அதுவல்ல. உண்மை அதுவாக இருந்தால், பூரணி ஆரம்பிக்கும்போது அந்த உண்மை எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. நண்பர் நேமிநாதனும், மகாலிங்கமும் பூரணியில் சேரும்படி என்னை அழைத்தபோது அதைப் பூரண சர்வோதய இதழாகவே நான் நம்பினேன். காரணம் அவ்விருவரும் பூரண சர்வோதய இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்ததே. முதல் இதழ் வெளிவந்தபோதே,

எல்லாவற்றையும் பிரசுரிக்கும் கருத்து, ஆசிரியர் தலையங்கத்தினூடாய் வெளிப்பாடாயிற்று. அப்போதே எங்களது உள் முரண்பாடுகளும் ஆரம்பமாயிற்று. உண்மைக்குப் புறம்பான இன்னுமொரு சங்கதி, பூரணி 'நட்பு' என்ற மகத்துவத்தை இணைசராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதென்பது. பூரணி ஆரம்பிக்கப்பட முன்னர் எனக்குச் சட்டநாதனையோ, தங்கவேலுவையோ, நேமிநாதனையோ தெரியாது. எங்களிடையே நட்பும் இருந்ததில்லை. பதிலாக, பூரணி தொடங்கியதன் பின்னரே, தங்கவேலு. நேமிநாதன், சட்டநாதன் ஆகியோரோடு தொடர்பு ஏற்பட்டது. எனவே சட்டநாதன் தந்திருக்கும் 'நட்பின் மகத்துவம்' 'நட்பே பூரணியின் இணைசரடு' ஆகிய தகவல்கள் முழுக் கற்பனை.

இ: ஜீவகாருண்யன்
(இமையவன்)

✶✶✶✶✶✶✶::✶✶✶✶✶✶✶

## எங்கள் கோன்கள்

சேறும் சகதியும் நிறைந்து
நாற்றமெடுத்து விட்ட
ஜனநாயகக் குளத்தில்
தூண்டல் போட்டு
மீன்களைப் பிடித்தோம்.
பின்னர்தான் தெரிந்தது
அவை......
எங்கள் பசி தீர்ப்பவையல்ல
எங்களையே விழுங்க
வந்த சுறாக்கள்.

ஜவாத்மரைக்கார்

★★★★★★★::★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சிங்களக் கலை இலக்கியத்துறையில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு!

எம், எம். மன்ஸூர்

---

ஜீ. மிஸிஹாமி

நவீன சிங்களக் கலை இலக்கியத்துறையில் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் பெண் எழுத்தாளர்களில் திருமதி ஜீ. மிஸிஹாமிக்கும் விசேஷட இடம் கிடைக்கிறது. நவீன இலக்கியவாதிகள் வரிசையில் உதித்த இவர் ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளர் ஆவார். தமிழ் மொழிமீது அபார பற்று வைத்துள்ள இவர், தமிழ் அறிவு மிக்க ஒரு சிங்கள இலக்கியாசிரியையாவார்.

திருவள்ளுவர் இயற்றிய 'திருக்குறள்' மறை நூல் 1330 குறள்களும் அடங்கும் வகையில் சிங்களத்துக்கு மொழிபெயர்த்து சிங்கள இலக்கிய உலகுக்கு அளித்த பெருமை இவரையே சாரும். தமிழறிஞர்களின் பாராட்டுதலுக்குப் பாத்திரமான இம் மொழிபெயர்ப்பு நூல், சிங்கள இலக்கியத்தில் இருக்கும் தமிழ் மொழிபெயர்ப்பின் மிகவும் பழமையானதாகும். இதுவும் மூன்று பிரிவுகளை உடையது.

பழம் பெரும் இலக்கியங்களில் ஒன்றான தமிழ் இலக்கியமும் ஏனைய உலக இலக்கியங்களை வளர்ப்பதற்கு ஆதாரமாய் இருந்திருக்கின்றது. அந்த இலக்கிய நூல்களுள் 'திருக்குறளும்' ஒன்றாகும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந் நூல் சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு காலத்தால் பிற்பட்டது. 'சமுதாய உயர்ச்சிக்கும் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வேண்டிய போதுமான அறிவுரைகள் இதில் அடங்கி இருக்கின்றன' என்பதை சிங்கள இனத்தவர்கள் அறியும் வண்ணம் இவர் மேற்கொண்ட முயற்சி என்றென்றும் பாராட்டத்தக்கன. எளிய நடையில், இனிய முறையில் எவரும் இலகுவில் படித்தறியும் வகையில் பெயர்க்கப்பட்டுள்ள இந் நூல் சிங்கள இலக்கியத்தை வளப்படுத்த, தமிழின் சிறப்பைப் பலப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியே ஆகும். அதனால் இவர், இலக்கியவாதிகளின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய தரமானதொரு இலக்கிய ஆசிரியையாகத் திகழ்கிறார். ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல இந்த ஒரு நூல் மாத்திரமே அவரது திறமையை எடுத்துக் காட்டவும், இலக்கிய உலகில் அவரது பெயர் நிலைத்து நிற்கச் செய்யவும் போதுமானதாகும்.

★

கருணா குமாரி

திருமதி கருணா குமாரியை சிறுவர் இலக்கிய ஆசிரியையாக அறிமுகப்படுத்துவதே பொருத்தமாகும். ஏனெனில் இவரது நோக்கம் சிறுவர் இலக்கியத்தை வளப்படுத்துவதேயாகும். பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவான இலக்கிய நூல்களை எழுதுவதைவிட சிறுவர்களுக்கான நூல்களை, இலக்கியங்களை எழுதுவது அவ்வளவு சுழபமான காரியமல்ல. அப்படியான நூல்களை எழுதுவதற்கு அனுபவமும் சிறுவர் மன நிலை பற்றிய தெளிவான அறிவும் தேவை. இல்லையேல் தரமான இலக்கியங்களைப் படைக்க முடியாது போய் விடும்.

இவற்றில் எல்லாம் சிறந்த அறிவும், அனுபவமும் பெற்றவர் திருமதி கருணுகுமாரி. அவர் தனது அனுபவ வாயிலாகப் பெற்ற அறிவைப் பயன்படுத்தி எழுதிய சிறுவர் இலக்கிய நூல்கள் அநேகம் உள்ளன. என்றுலும், சிங்கள மொழியில் இவர் எழுதிய சிறுவர் இலக்கிய நூல்கள் மிகவும் குறைவு. எப்படியாயினும் சிறுவர்களது உளம் கவர்ந்த நூல்களுள் 'மாலகிரவா' (சோலைக் கிளி), 'போனிக்கா' (பொம்மை) 'அலிகழபலய' (யானைக் குழப்பம்), 'புஞ்சி இகிழி' (கோழிக் குஞ்சு) என்பன தரம்வாய்ந்தன. இந் நூல்களைச் சிறுவர்கள் படிப்பதனுல் அவர்களது பிஞ்சு உள்ளங்களில் கதை வடிவம் பசுமரத்தாணி போல் பதிவதோடு வாசிப்பு ஆர்வமும், கதை கேட்கும் ஆசையும் பிறக்கிறது. இதனுல்தான் போலும் நவீன சிங்கள சிறுவர் இலக்கியத்தில் திருமதி கருணுகுமாரிக்கு உன்னத இடம் கிடைக்கிறது.

★

**சுமணு குணசேகர**

**சுரங்கனி பன்னில**

சுமணு குணசேகர, சுரங்கனி பன்னில பீ.ஏ (கௌ.இலங்கை) இருவரும் இணைந்து எழுதிய 'உபரிம குர்ஹ வித்யாவ' உயர்ந்த அல்லது (கூடிய மனையியல் விஞ்ஞானம்) என்பதாகும். எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந் நூல், சிங்கள மனையியல் விஞ்ஞான இலக்கியத்தில் புகழ்பெற்ற ஒரு நூலாகும். பெண்களுக்கு, மாணவிகளுக்கு இலகுவில் மனையியலைக் கற்றுக் கொடுப்பதே இந்நூல் எழுதப்பட்டதன் பிரதான நோக்கமாகும்.

★

**மாகரீட் ஐ. வீரவர்தன**

சிங்கள இலக்கியத்தில் பொருளாதார விஞ்ஞானம் சம்பந்தமாக பி. எஸ். ஸி. (லண்டன்) பட்டம் பெற்ற திருமதி மாகரீட் ஐ. வீரவர்தன பொருளாதார விஞ்ஞான நூல்களை எழுதிய இலக்கிய ஆசிரியைகளுள் முதலாவது ஸ்தானத்தைப் பெறுகிறுர்.

இவர் தனது கணவரான திரு. வீரவர்தனவுடன் இணைந்து பல நூல்களை எழுதியுள்ளார். இவர்களால் எழுதப்பட்ட 'லங்கா ஆர்த்திக சலஸ்ம' (இலங்கைப் பொருளியல் திட்டம்), 'லங்காவஹா — ரட்டவசியா' (இலங்கையும் மக்களும்) 'ஆர்த்திக்க வித்யா பிரவேசய' (பொருளியல் விஞ்ஞான அறிமுகம்) எனும் மூன்று நூல்களும் சிங்கள இலக்கியத்தில் தரமான நூல்களாக மதிக்கப்படுகின்றன. மிக ஆழமான முக்கிய விடயங்கள் சம்பந்தமாக சிங்களத்தில் எழுதி சிங்கள இலக்கியத்தை வளப்படுத்தப் பாடுபடும் இவ்விருவரையும் பாராட்டுதல் தகும். இந்நூற்கள் சிங்கள இலக்கியத்தில் அவ்விடயங்கள் சம்பந்தமாக எழுதப்பட்ட ஆரம்ப நூல்களுக்கு இடையில் மிகவும் பிரதானமான நூல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமதி அபய குணவர்தன

நாட்டின் சுதந்திரத்தை மனதில் கொண்டு செயலாற்றிய தரமான பெண்களில் ஸ்ரீமதி அபய குணவர்தனவும் ஒருவர். இருபதாம் நூற்றாண்டின் முதல் வருடத்தில் பிறந்த இவர் சிறந்த ஒரு எழுத்தாளர்.

நல்ல சிந்தனைகள் மூலம் சமுதாயத்தினைக் கட்டி எழுப்ப அயராது உழைக்கும் இவர் தேசாபிமானமிக்க இலக்கியாசிரியையாவார். பெண்ணினத்தை நல்வழியில் இட்டுச் செல்ல முனைபவர். அவரது கவிதைகள் சுவை மிக்கன, படிப்பினையூட்டுவன; அதனால் அவை பிரபல்யமாகின; அவர் எழுதிய 'வலகம்பா சோமாதேவி' எனும் நூல் வரலாற்றுக் கதையாகும். மேலும் பத்திரிகைகளில் எழுதிய கவிதைகள் அநேகம் உள்ளன. இவரது இலக்கியச் சேவை சிங்கள இலக்கியத் துறைக்குக் கிடைத்த மாபெரும் பேறாகும்.

★

கத்தரின் என் ஹபுகல

திருமதி கத்தரின் என் ஹபுகல சொந்த நாடு, இனம், சமுதாயம், மொழி, இலக்கியம் என்பவற்றின் முன்னேற்றத்தைப் பிரதானமான நோக்கமாகக் கொண்டு செயலாற்றிய எழுத்தாளர்களில் மறக்க முடியாதவர்.

இவரது 'அனுலா சகா அகே வல்லபயோ' (அனுலாவும் அவள் காதலும்) எனும் வாழ்க்கை வரலாற்றுக் கதை சுவை மிக்கது. இலங்கைச் சரித்திரத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த பெண் ஒருத்தியான அனுலா தேவியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் இக் கதையில் அவளது வாழ்க்கைச் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் வெளிப்படுகின்றன. 'பெண்கள் சகல செயல்களிலும் ஈடுபட்டுக் கொள்ள வேண்டும்' என்பது திருமதி ஹபுகலவின் நோக்கமாகும். அவரது நோக்கம் நிகழ்காலப் பெண்மணிகளிடம் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது. 'அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பேது?' என்ற பழங்கால மரபைப் பின்பற்றி வீட்டுக்குள்ளேயே அடங்கி, முடங்கிக் கிடந்த பெண்கள் எல்லோரும் அந்தப் பழங்கதையை உதறித் தள்ளிவிட்டு' அடுப்பூதும் பெண்களுக்கு துடுப்பும் பிடிக்கத் தெரியும்' என்பதை மெய்ப்பிப்பதற்காக அச்சம் எதுவும் இன்றி சமுதாயத்தின் மத்தியில் இறங்கி திறமையான முறையில் செயலாற்றி வருவது திருமதி ஹபுகலவைப் போன்ற பெண் எழுத்தாளர்களின் மூலம் ஏற்பட்ட சேவை என்று கூறலாம். வீழ்ச்சிப்பாதையை நோக்கிச் சென்ற சிங்கள மொழி, இலக்கியம், கலாசாரம் என்பவற்றுக்கு இவர் மூலம் கிடைத்த பயன்கள் அநேகம். அனுலாவின் வாழ்க்கையின் மூலம் பெண்கள் பெறக்கூடிய படிப்பினைகள் எண்ணில் அடங்காதவை எனலாம்.

★

ஈ. ஹார்லின் ருத்ரிகோ

நவீன சிங்கள இலக்கியத்தில் நிறைந்த கேள்வி ஞானம் உடைய ஒரே ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் திருமதி ஈ. ஹார்லின் ருத்ரிகோவை அறிமுகப்படுத்தலாம். 'சாகித்திய சகராவ', 'ரசவாஹினி' உட்பட இவர் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் அநேகம். பத்திரிகைக் கலையில் ஒரு பிரதான இடம் இவருக்குக் கிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இலக்கியம், நாடகம் விமர்சனக் கொள்கைகள்—அறிவு சம்பந்தமான பரந்த ஞானம் இவருக்கு உண்டு. இவர் ஒரு எம். ஏ. பட்டதாரியும் ஆவார். கலாசார இலக்கியம் சம்பந்தப்பட்ட நாடகம், குறுங் கவிதை, உரைநடைக் காவியம், கட்டுரைகள், இசை என்பன பற்றி எழுதிய விளக்கக் கட்டுரைகள் அநேகம். விமர்சனக் கலையில் இயற்கை அறிவு பெற்ற ஹார்லின் ருத்ரிகோ சிறந்த பத்திரிகை எழுத்தாளராவார். இவர், குவியல் குவியலாக நூல்கள் எழுதாவிட்டாலும், நவீன சிங்கள இலக்கியத்தை வளப்படுத்துவதற்ககே இவர் ஆற்றி வரும் சேவை மகத்தானது.

★

**விஸாக்க குணதிலக்க**

இவரும் ஒரு பத்திரிகை எழுத்தாளராவார். எம். ஏ பட்டதாரியான இவர், கல்வி, விஞ்ஞானம் சம்பந்தமாக டிப்லோமாப் பட்டமும் பெற்றுத் திகழ்கிருர். எழுத்தாற்றல் மிக்க திருமதி விஸாக்கா குணதிலக்காவுக்கு பௌத்த இலக்கியம் பற்றிய அறிவு அதிகம் உண்டு. பௌத்த இலக்கியத்தை புகழடையச் செய்யவும், வளர்க்கவும் குறிக்கோள் அமைத்துக் கொண்டுள்ள இவர், பல்வேறு பத்திரிகை, சஞ்சிகைகளுக்குக் கட்டுரைகளை வழங்கி வருகிருர்.

1961-ம் ஆண்டு வெளியான 'நவீன சிங்கள உரைநடை' எனும் இலக்கியத்தை அறிவியல ஆக்கத்துடன் மீலாய்ஷ செய்தது திருமதி விஸாக்கா குணத்திலக்காவும், பண்டிதர் அசோக்கா கருணரத்னவும் ஆவார்கள். இது, அண்மைக் காலத்தில் வெளிவந்த மிகவும் பெறுமதி வாய்ந்த அறிவியல் கட்டுரைத் தொகுப்பாகும்.

கலாசார இலக்கியத்தைச் சேர்ந்த பௌத்த காவியங்கள் உரை நடை நூல்கள் சம்பந்தமாக பரந்த அறிவு பெற்ற திருமதி விஸாக்கா அதுபற்றிய கட்டுரைகளை சஞ்சிகைகளுக்கு அளிக்கிருர். அவை மிகவும் பயனுடையன; இவர் மூலம் சிங்கள மொழி, இலக்கியம் என்பனவற்றுக்கு ஏற்பட்டு வரும் அறிவியல் சேவை மிகவும் பாராட்டுக்குரியன.

★

**டி. எல். பத்திரன**

நவீன சிங்கள இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்களால் பல்வேறு வகையான நூல்கள் எழுதப்பட்டிருந்த போதும், நெசவு சம்பந்தமான விளக்கத்தை அளிப்பதற்கென எழுதப்பட்ட நூல்கள் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளன.

இந்தக் குறையினைப் போக்குவதற்கு திருமதி டி எல். பத்திரன மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது அவரது முயற்சியின் பயனே 'ரெதி விவீ ' (நெசவு நெய்தல்) எனும் நூலாகும். நெசவுத் தொழில் பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் பரந்த அறிவு பெற்றுள்ள இவரது நோக்கம் இந் நாட்டில் நெசவுத் தொழிலை அபிவிருத்தி அடையச் செய்வதும், அது பற்றிய அறிவைப் பெண்ணினத்துக்குப் பெற்றுக் கொடுப்பதுமேயாகும். அவரது நோக்கம் 'ரெதி விவீம' மூலமாக தெள்ளெனப் புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவிக் குஞ்சு

மாக்ஸிம் கார்க்கி

மஞ்சள்நிற வாயுள்ள அந்தக் குருவிக்குஞ்சு மிக உற்சாகமாக இருந்தது. 'புதிக்' என்பது அதன் பெயர். அது குளியலறை ஜன்னலுக்கு மேலேயுள்ள வெதுவெதுப்பான கூட்டிலிருந்து மென்மையாகக் குரல் கொடுத்தது. அது பறக்க முடியவில்லை. ஆனால் தனது பிஞ்சுச் சிறகுகளை அடித்துக் கொண்டு, கூட்டுக்கு வெளியே தலையை நீட்டியது.

'அட போக்கிரி! உனக்கு என்ன வேண்டும்?' என்று அம்மாக் குருவி கேட்டது.

குருவிக் குஞ்சு சிறகுகளை அடித்துக்கொண்டு, கீழே பார்த்துக் கூறியது:

'நல்ல சந்தர்ப்பம்! நல்ல சந்தர்ப்பம்!'

அப்போது அப்பாக் குருவி பறந்து வந்தது. 'புதிக்' தின்னுவதற்குச் சில வண்டுகளைக் கொடுத்தது.

'நான் ஒரு சாம்பியன் தானே?' என்று கேட்டது.

'ஆம். நீங்கள் ஒரு சாம்பியன்தான்! சந்தேகமில்லை' என்று அம்மாக் குருவி பாடியது.

அப்பா கொண்டுவந்த வண்களைத் தின்றுவிட்டு, 'புதிக்' ண்ணியது:

'சாம்பியன் என்று பெருமையடித்துக் கொள்ள என்ன இருக்கிறது? ஒரு வண்டைக் கொண்டுவந்து விட்டாராம்; அதனால் சாம்பியனும்!'

இவ்வாறு எண்ணிக்கொண்டு கூட்டிலிருந்து தலையை வெளியே நீட்டி அது சுற்றுமுற்றும் பார்த்தது.

'அட போக்கிரி! கீழே விழுந்துவிடாதே' என்று அம்மாக் குருவி திட்டியது.

'என்ன சந்தர்ப்பம்' என்று 'புதிக்' கூச்சலிட்டது.

'அட வாயாடி சும்மா கிட: நீ கூச்சல் போட்டால், பூனை வந்து உன்னைப் பிடித்துக் கொள்ளும்; 'நறுக், நறுக்' என்று கடித்துத் தின்றுவிடும்' என்று கண்டித்துவிட்டு, அப்பாக் குருவி பூச்சி புழுக்களைப் பிடிப்பதற்காக வெளியே பறந்து சென்றது.

குருவிக் குஞ்சின் இறக்கைகள் வளர்ந்து வந்தன.

ஒருநாள் காற்று ஓலமிட்டது. அப்போது புதிக் கேட்டது:

'அது என்ன?'

'காற்று ஓலமிடுகிறது. அது கூட்டிலிருந்து உன்னைத் தூக்கி கீழே எறிந்துவிடும். கீழே இருக்கும் பூனை உன்னை நறுக் நறுக் என்று கடித்து விழுங்கிவிடும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டதும் 'புதிக்' பயந்து விட்டது.

'கிளைகள் ஏன் ஆடுகின்றன? ஆடக்கூடாது என்று அவற்றிடம் சொல்லு. அவை சும்மா இருந்தால் காற்று வீசாது......' என்று அம்மாவிடம் புதிக் கூறியது.

'நீ சொல்வது சரியல்ல' என்று அம்மா கூறியது. ஆனல் அம்மாவின் பதில் குருவிக் குஞ்சுக்குத் திருப்தியளிக்கவில்லை. அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது' என்று அது நினைத்துக் கொண்டது.

ஒருநாள் அந்த வீட்டின் வழியாக ஒரு குடியானவன் சென்ருன், புதிக்கைப்பார்த்து கையை ஆட்டினுன்.

'இதோ ஒரு சிறகில்லாத பிராணி; இதன் இறக்கைகளைப் பூனை கடித்துத் தின்றிருக்க வேண்டும்' என்று புதிக் கத்தியது.

'அது பிராணியல்ல; மனிதன்! மனிதர்களுக்குச் சிறகுகள் கிடையாது!' என்று அம்மாக் குருவி கூறியது.

'ஏன்?'

'அவர்கள் பெரியவர்கள்; சிறகுகள் இல்லாமல் அவர்களால் வாழ முடியும். அவர்கள் கால்களால் நடந்து செல்வார்கள்'

'ஏன்?'

'அவர்களுக்குச் சிறகுகள் இருந்தால், நம்மைப் பிடித்து விடுவார்கள். நானும் அப்பாவும் ஈக்களைப் பிடிப்பதைப் போல,

'எல்லோருக்கும் சிறகுகள் இருக்க வேண்டும். காற்றில் பறப்பதை விட, தரையில் நடப்பது கடினம். நான் பெரியவன் ஆனதும், எல்லோருக்கும் சிறகு முளைக்கச் செய்வேன்; எல்லோரும் பறந்து செல்ல வேண்டும்' என்று புதிக் கூறியது.

அது கூட்டின் ஓரத்தில் அமர்ந்து உரத்த குரலில் பாடத் தொடங்கியது.

'சிறகு இல்லாத மனிதர்களே
சிரித்து நடக்கும் பெரியோரே!
வண்டு உம்மைக் கடித்துவிட்டால்
வாய்விட் எப்படி நீர் சிரிப்பீர்?
சின்னஞ் சிறிய வண்டுகளை
சிறியேன் நானும் கண்டுவிடில்.
ஒன்றுகூட விடமாட்டேன்
உள்ளே தள்ளி விழுங்கிடுவேன்'

இவ்வாறு குருவிக் குஞ்சு கும்மாளத்தோடு பாடியது. ஆனல், மகிழ்ச்சி வெறியில் கூட்டிலிருந்து கீழே விழுந்துவிட்டது. அம்மாக் குருவி அதைக் காப்பாற்றச் சென்றது. அப்போது ஒரு பூனை அங்கு ஓடிவந்தது,

பூனையைக் கண்டதும் புதிக் பயந்து விட்டது. அதன் சிறகுகள் தளர்ந்து விட்டன. கால்கள் நடுங்கின.

'வணக்கம். உங்களைக் காண மிக மகிழ்ச்சி' என்று 'புதிக்' கூறியது.

அப்போது அம்மாக் குருவி புதிக்கை ஒரு பக்கம் தள்ளியது. தனது நெஞ்சையும் முகத்தையும் உயர்த்திக் கொண்டு, பூனையைக் கோபமாகப் பார்த்தது; வேகமாகப் பாய்ந்து பூனையின் கண்களைக் கொத்தியது.

'புதிக் பறந்து போ! ஜன்னல் மேலே ஏறிக்கொள்! சீக்கிரம் பறந்து போ' என்று அது கூறியது.

உடனே குருவிக் குஞ்சு 'விர்' ரென்று பறந்து சென்று ஜன்னலில் உட்கார்ந்து கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு அம்மாக் குருவியும் ஜன்னலுக்குப் பறந்து சென்றது. ஆனால் அதன் வாலைப் பூனை கடித்துக் குதறி விட்டது. வால் இல்லாவிட்டலும், அம்மாக் குருவி மிக மகிழ்ச்சியுடன் தன் குஞ்சை அணைத்துக் கொண்டது.

'என் கண்ணே! நான் சொன்னதைக் கேட்டிருந்தால் இவ்வளவு தொல்லை வருமா?' என்றது.

'அதனால் என்ன? எல்லாவற்றையும் ஒரே நாளில் தெரிந்து கொள்ள முடியுமா? என்று குருவிக் குஞ்சு அம்மாவிடம் கேட்டது.

தரையில் அமர்ந்திருந்த பூனை, தாய்க் குருவியின் வாலைக் கடித்துத் தின்றுகொண்டிருந்தது. இரண்டு குருவிகளையும் அது முறைத்துப் பார்த்தது.

'திமிர்பிடித்த குருவிக் குஞ்சே......... சுண்டெலியைப் போல் எவ்வளவு செழிப்பாக இருக்கிறாய்! மியாவ் மியாவ்' என்று பூனை கத்தியது.

வால் போனாலும் குஞ்சு பிழைத்ததே என்ற மகிழ்ச்சியில் தாய்க்குருவி திளைத்திருந்தது. ★

## அலைகள்

வெள்ளிக் கிழமை!
பள்ளியில் 'ஜும்ஆ'
முடிந்த பின்னரும்.........
விஷேஷமாய்.........
பிரார்த்தனை தொடர்ந்தது!
'பெரியவர்' எழுந்தார்......

'அள்ளி அள்ளி இறைத்த மனிதர்
அந்தஸ்தில் உயர்ந்த மனிதர்
கடத்தினர் என்றே அவரைப்
பிடித்துளார்!
இறைவா அன்னார் விடுதலை பெறவே
உதவுவாய்' என்றே
ஒப்பாரிக் குரலில்
பிரார்த்தனை செய்தார்......!

மாத மொன்றின் முந்திய நிகழ்வை
மனதின் அலைகள் அடித்து வந்தன!
பசியின் கொடுமை
பொறுத்திட வொன்ன (து)
பள்ளிப் பணத்தில்
பத்து ரூபாய் திருடிய மனிதரை
அடியாய் அடித்து பொலீசில்—
பிடித்துக் கொடுத்த அந்த மனிதர்!
ஓ...! அந்தச் 'சமூக சேவகர்'
பிரார்த்தனை செய்யும்,
'பெரிய மனிதர்!'

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த கவிஞன் நீலாவணன் மல்லிகையின் நெருங்கிய ஆத்ம நண்பர்களில் ஒருவர். இறந்த பின்னர்தான் இலக்கியகாரனை மதிப்பார்கள்; போற்றுவார்கள் என்ற தமிழனின் தனிப் பெரும் குணத்திற்கு எதிராக இருக்கும் பொழுதே 1970 — மே மாதம் இதழில் அன்னாரது உருவத்தை அட்டையில் பதித்துக் குறிப்பும் எழுதியிருந்தோம். 'ஆழ்ந்த மனிதாபிமானம் மிக்க, தேசியத் தாகம்கொண்ட, முற்போக்கான உள்ளடக்கமும் உயிர்த் துடிப்பான உருவ அமைப்பும் கொண்ட பல அருங் கவிதைகளை ஆக்கித் தரும் கவிஞர் நீலாவணன் உருவத்தை அட்டையில் போடுவதில் மல்லிகை பெருமிதம் கொள்கின்றது' எனக் குறிப்பிட்டிருந்தோம். அது மாத்திரமல்ல. மல்லிகையின் முதல் இதழிலேயே 'கூத்து' என்ற தலைப்பில் அவரது கவிதைப் பொறியொன்று வெளிவந்துள்ளதையும் இங்கு கூறிவைக்கத்தான் வேண்டும். சமீபத்தில் கிழக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்த பொழுது அவர் காட்டிய உயர்ந்த இலக்கிய நட்புப் பண்பை நம்மால் என்றுமே மறந்துவிட முடியாது. சத்திய உணர்வுடன் சொல்வதானால் அவர் எந்தக் காலத்திலுமே இன வெறியனாகவோ, தமிழின் பேரால் கடைபரப்பி தட்டுவாணிச் சூதாட்டம் செய்த அரசியல்வாதியாகவோ இருந்ததில்லை. அதே சமயம் தமிழ் அபிமானியாகத் திகழ்ந்தார் என்பதே உண்மை. ஒரு கால கட்டத்தைப் பிரதிபலித்த அந்த மனிதாபிமானக் கலைஞன் ஞாபகமாக இக் கட்டுரையை இங்கு பிரசுரிக்கின்றோம்.

— ஆசிரியர்

# நீலாவணன் என்னும் அழகிய கவிதைச் சோலை

மருதூர்க்கனி

நீலாவணனின் 'அழகிய கவிதைச் சோலை' செழித்து வளர்ந்து, காய்த்துப் பழுத்து நிரம்பி வழிந்தது. அவற்றை ரசிக்கவும், அங்கு தாகந்திற்குப் பருகவும், கிளிக்குஞ்சுகளும், மணிப்புறுக்களும் அங்கு வந்து கூடின. அந்த அழகிய கவிதைச் சோலை இரவும் பகலும் கல்யாண வீடுபோல சதா கலகலப்பாகவே இருந்தது.

சிந்தனைகள் வளர்ந்து— இறகு முளைத்த அந்தப் பறவைக் குஞ்சுகள், முழுமனித குலத்துக்குமான விமோசனத்திற்குமான பாதையைத் தேடிப் பறக்கத் தொடங்கின. ஆனாலும் தாம் வளர்ந்த கவிதைச் சோலையை மறக்கமுடியாமல் நினைவுகளில் மீட்டிக் கொண்டேதான் பறந்து கொண்டிருந்தன.

இன்று, உயர்ந்த — உன்னதமான மனிதாபிமான லட்சியத்திற்காக குரல் கொடுத்துப் பாடும் அந்தப் பறவைகளின் தீட்சண்யமான கவிதைக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் எதிரொலிக்கின்றன. மனிதனை மனிதன் சுரண்டாத விடுதலையின் சுவர்க்க பூமியைப் படைப்பதற்காக அவர்களின் எழுத்தாயுதங்களால் வாழ்வென்ற வீணையில் பூபாளம் இசைத்து மீட்டப்படுகின்றன!

இந்த லட்சியங்களால் புடம் போடப்பட்டு, இன்று நிமிர்ந்து நின்று பிரகாஷிக்கின்ற இந்தக் கவிதைப் பறவைகளின் அன்றைய அழகிய — மனிதாபிமானத் தோற்றத்திற்கு அடியெடுத்துத் தந்த பெருமையும் சிறப்பும் நிச்சயமாகவே நீலாவணனின் அழகிய கவிதைச் சோலைக்கே உரியது.

இந்த அழகிய கவிதைச் சோலையில் இரவு பகலென்று பாராமல் ஆவேசத்தோடு சதா பாடிக்கொண்டிருந்த அந்த ஆண் குயிலின் இனிய நாதம், திடீரென்று 11-1-75-ஆந் தேதி பிற்பகலிரவு 11-30 மணியளவில் நின்றேவிட்டது! ஆனாலும் அந்த, அழகிய ஆவேசப்பிளம்பு உற்பவித்த கனற் பொறிகளின் இனிய நாதம் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டேயிருக்கும். இந்தக் கனற் பொறிகளின் இனிய நாதம் இந்த உலகத்தின் மாற்றத்திற்காக ஓங்கிப் பாடிக் கொண்டேயிருக்கும்!

12-1-75-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை, பனிபடர் பிரதேசத்தின் கடுங்குளிரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது; 'பொல்லாத பயங்கரமான குளிர் வீசுகின்றது. இருதய நோயாளர்கள் கவனமென்ற வைத்தியர்களின் அறிக்கைகளையும் நினைத்துப்பார்த்த வண்ணம் நான் கடற்கரைப் பக்கமாகப் புறப்படுகிறேன்.

மாசிமாத மழைப்பனி, மரகதத்தினில் நித்திலம் கொட்டியும் தூசு நீவிய மெத்தெனும் போர்வையில் துயில்கிறாள்...... தூரத்தே......... தாய்மையின் பாசம் முற்றிய பசுவொன்று தன் கன்றை 'ம்மா' என்று அழைக்கிறது... என்ற நீலாவணனின் 'வேட்கை' கவிதையின் அடிகளை அன்றைய விடியற் பொழுதோடு தொடர்புறுத்திக் கொண்டு கடற்கரை ஓரமாக நடந்து கொண்டிருக்கிறேன்.

பசையற்ற வெம்புமணலிலும் பசுமைகாணும் — உழைக்கின்ற மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் நீலாவணனின் "பசையற்ற மண்' கவிதையின் களத்தினை ஊடறுத்துப் போகையில், 'வண்ணார் துணி வெளுக்கும் தோணு' தெரிகின்றது. அதற்குக் கிழக்கில் கடற்கரையில் தோணி ஒன்று கரை சேருகின்றது; நான் அந்த இடத்துக்குச் செல்லுகிறேன். வலையில் தோரு, அறுக்குளா, பாலை மீன்வகைகள் பட்டுத் துடிப்பது தெரிகின்றது! வலை இழுக்கின்ற மீனவர்கள் பற்றிய நீலாவணனின் குழந்தைப்பாடலொன்றை எனது வாய் முணுமுணுக்கின்றது.

தோணியிலிருந்து இறங்கி கரைக்குவந்த மஜீதுத் தண்டயல் என்னை உற்றுப் பார்க்கிறார்! 'இரவு, நீலாவணன் இறந்தாமே......' என்று என்னிடம் கேட்கிறார்.

என்னால் நம்பவே முடியவில்லை! ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேருகிறேன். மனைவியிடமும் சொல்லிவிட்டு 'கொத்த' னிடம் ஓடுகிறேன். அந்தப் பாரச் செய்தியை கொத்தனுக்கு நான்தான் முதலில் ஏத்திவைக்க வேண்டியிருந்தது. அவரையும் பைசிக்கிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியில் ஏற்றிக் கொண்டு நீலாவணனின் வீட்டுக்குப் போய்ச் சேருகின்றேன்.

அந்தப் பொல்லாத காட்சி என்னை அப்படியே உருக்கியே விட்டது. எங்கள் அன்புக்கும் பாசத்துக்குமுரிய நீலாவணன் நீண்ட உறக்கத்தில் கிடந்தார். அண்ணியும், மருமக்களும் உற்ருர் உறவினர்களும் பிரிவைத் தாங்கமாட்டாமல் தம்மைக் கசக்கிப் பிழிந்து தாரை தாரையாக வார்த்து ஊற்றிக்கொண்டு கிடந்தார்கள்!

அண்ணன் நீலாவணன் 1964-ம் ஆண்டு எழுதிய, 'இந்த உலகில் இருந்த சில நாழிகையில்.. ...' என்ற 'துயில்' கவிதைதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. அந்தத் 'துயில்' கவிதையைப் பற்றி, ஏற்கனவே என்னிடத்தில் குறிப்பிட்டிருந்ததை ஒருதரம் நினைத்துப் பார்த்தபொழுது, எனது சலிப்பை அடக்கவே முடியவில்லை..!

அண்ணனின் மூத்த மகன் 'வேந்தனைக்' கண்டு யார்யாருக்கு அறிவித்திருக்கிருய் என்று கேட்கிறேன்..... தபாற்கந்தோருக்குச் செல்லுகிறேன்; நண்பர்களுக்குத் தந்தி கொடுக்கிறேன். மீண்டும் வந்து சேருகிறேன். நண்பர்கள், சிவலிங்கம், சடாட்சரம், அன்புமுகைதீன், பஸீல் காரியப்பர், பாண்டியூரன், ஜீவா ஜீவரத்தினம், நெய்தல் நம்பி, நவம் எல்லோரும் வந்து சேருகின்றனர்.

"நாம் என்ன செய்வது..... எப்படி நடந்து கொள்வது?" என்று கொத்தனும், நானும், சிவலிங்கமும், சடாட்சரமும், நவமுமாக கூடி யோசிக்கின்ேரும். பத்திரிகைகளுக்குச் செய்திகள் எழுதுகிறேம். 'துயில்' பாடலை அச்சடித்து அத்துடன் கல்முனைப் பிரதேச எழுத்தாளர்களின் சார்பில் ஒரு அனுதாபச் செய்தியை வெளியிட முடிவு செய்கிறேம். அத்துடன் மயானத்தில் நடத்தவிருக்கும் அனுதாபக் கூட்டத்தை ஒழுங்கு செய்வதிலும் அதற்காக முடிந்த அளவு உதவுவது பற்றியும் ஆலோசிக்கின்றேம்.

13 - 1 - 75-ஆந் தேதி வரவேண்டிய நண்பர்களும் உறவினர்களும் வந்து கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து மஹாகவியின் மனைவியாரும், மூத்த மகனும், வரதராசனும் இன்னும் பலரும் வந்து சேர்ந்தார்கள்.

மரண ஊர்வலம் பி. ப. 4 மணியளவில் பெரிய நீலாவணைக் கடற்கரையை நோக்கிப் புறப்பட்டது. 'ஊரிலே பறை மேளம் ஒலித்தது. உண்மை, ஓருயிர் போயது' என்ற நீலாவணனின் ஒரு கவிதையின் வரிகளை எனக்குள் நினைக்கிறேன்.

பெரியநீலாவணையின் சரித்திரத்திலேயே கண்டறியாத ஜன சமுத்திரம் மயானத்தை அடைகின்றது. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் தலைமையில் அனுதாபக் கூட்டம் ஆரம்பமாகியது.

கிழக்கிலங்கையின் கவிமழை ஓய்ந்துவிட்டது என்று தொடங்கிய புலவர்மணி அவர்கள் மயான வைராக்கியம் பற்றிப் பேசி..... தற்காலிகப் 'பாஸ்ப் போட்'டில் நாம் இந்த உலகத்திற்கு வந்திருக்கிறேம் என்றும், 'பிறந்த மண்ணைப் பெரிதாய் நேசித்தவர்' 'சமூகத் தொண்டர்' என்றும் தனது தலைமையுரையில் கூறிமுடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மு. ஷரிபுத்தீன், கல்முனைப் பூபால், வசீகரன் முதலியோர் கவிதாஞ்சலி செய்தார்கள்.

புலவர் ஆ. மு. ஷரிபுத்தீன் தனது கவிதாஞ்சலியின்போது, தன்னுடைய நல்மாணுக்கருள் சிரேஷ்ட மாணவராகவும் குருவின் நல்லாசி பெற்ற மாணவராகவும் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தவர் என்றும், தனக்குச் சரமகவி பாடுவானென்று தாம் நம்பியிருக்க குருவையே சரமகவி பாடச் செய்துவிட்டுப் போய்விட்டானென்றும் இரங்கினுர்.

மட்டக்களப்புத் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. செ. இராஜதுரை உரையாற்றுகையில், கல்முனைப் பிரதேசத்தில் ஒரு எழுத்தாளர் படையையே உருவாக்கிய எனது நல்ல நண்பனொருவன் மறைந்துவிட்டது தமிழுக்கும் கிழக்கிலங்கைக்கு பேரிழப்பென்று குறிப்பிட்டார்.

கலைஞர்களெல்லாம் இறந்ததன் பின்புதான் பாராட்டப்படுவது என்பது, கலைஞர்களுக்கும் நமக்கும் துரதிஷ்டமாகிவிட்டது. அதுவும், இந்த இளம் வயதில் (44) அருமை மனைவியையும் இரண்டு ஆண்களையும் மூன்று பெண் மக்களையும் பிரிந்து சென்றுவிட்டார். ஆனாலும் தன்னை அவர் நிலைநாட்டிவிட்டுச் சென்றுள்ளார். நீலாவணனின் கவிதைத் தொகுதி விரைவில் வெளிவர வேண்டும்; நீலாவணன் தொகுதியை மட்டுமல்ல கிழக்கிலங்கைத் தமிழ்க் கவிஞர்களுடைய கவிதைகளையெல்லாம் தொகுத்து ஒரு தமிழ்ப் பொக்கிஷமாக வெளிவரவேண்டும்; இதற்கு தன்னுலான முழு ஆதரவையும் தருவதாகவும், கூறினுர்.

மருதூர்க் கொத்தனும், மு சடாட்சரனும் தமக்கும் நீலாவணனுக்கும் இருந்த உறவையும், நினைவுகளையும் நினைவுகூர்ந்து மிகவும் உருக்கமாக எடுத்துரைத்து ஒரு காலகட்டத்தைப் பிரதிபலித்த கவிஞன் என்றும் தாமும் தமது நண்பர்களும் உருவாகுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்தவர் என்றும் வாழ்நாள் முழுவதும் ஓர் உணர்ச்சிப் பிழம்பாகவே வாழ்ந்தார் என்றும் அதுவே அவரது பலமும் பலஹீனமாகவும் அமைந்துவிட்டது என்றும் குறிப்பிட்டார்கள்.

மண்டூர்க் கவிஞர் சோமசுந்தரம், வேல்முருகு, வரதராசன் முதலியோரும் இரங்கலுரை நிகழ்த்தினுர்கள்.

இறுதி நிகழ்ச்சியாக, கவிஞர் நீலாவணனின் கவிதைகளில் சில படிக்கப்பட்டன. கல்லாறு சபாரத்தினம், ஆசிரியர், 'துயில்' கவிதையை மிகவும் உருக்கமாகவே பாடி தமது அஞ்சலியைச் செலுத்தினுர்; அதைத் தொடர்ந்து, கவிஞரின் பிறிதொரு பாடலை, 'நவம்' வாசித்தார். நீலாவணனின், 'பசையற்ற மண்' கவிதையை, அதே மரான — வெம்புமணல் களத்திலிருந்து நான்படித்தேன்.

அடக்கம் முடிந்தது; அழுகையும் நினைவுகளும் முடியவில்லை; அத்தோடு, கவிஞர் நீலாவணன் நினைதத சமூகப் பணி காலத்தின் தேவை உணர்ந்து, மேலும் கூர்மையாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளது. அதன் மூலம் தான் அவரது ஆத்மா சாந்தியடையுமென்று நினைக்கிறேன். தீமைகளுக்கு எதிராக குமுறு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கின்ற அவரது சுபாவம் அழகான கவிதைப் பிழம்பாக சமூகத்தைப் பிரதிபலித்தது. அதன் வழியில் புறப்பட்டுள்ள புதிய செங்கவிஞர் படை இன்று சமூகத்தைப் பிரதிபலிப்பதோடு நில்லாது சமூகத்தை மாற்றுவதற்கான உந்து சக்தியாகப் புறப்பட்டுக் கொண்டு நிற்கின்றது.

சிலர் குறிப்பிடுவது போல, நீலாவணன் தமிழில் எழுதியதாலோ, அல்லது கிழங்கிலங்கையில் பிறந்ததாலோ அவர் நின்று வாழப் போவதில்லை! நீலாவணன் கவிஞன். சமுதாயத்தில் நிலவிய கொடுமைகளுக்கு எதிராக, கஷ்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக குரல் கொடுத்தவன்; உயர்ந்த மனிதாபிமானி. அதனுல்தான் நீலாவணன் வாழப்போகிருன். அவரது கவிதைகள் காலத்தின் போக்கோடு, அவரளவில் நின்று சமுதாய நோக்கில் விமர்சிக்கப் படவேண்டும். அந்தப்பணி தொடரப்பட வேண்டும்; தொடரப்படும். பாரதிக்குப் பின், கவிதையை வளப்படுத்திய கவிஞர் வரிசையில் நிச்சயமாகவே நீலாவணனுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. நீலாவணன் என்ற பெயரில்மட்டுமல்ல, 'நீலா—சின்னத்துரை' என்ற பெயரில் கதைகளும், 'கொளுவு துறட்டி' என்ற பெயரில் இலக்கியப் போலிகளுக்கு ஆப்பு, 'அம்மாச்சி ஆறுமுகம்' என்ற பெயரில், சீர்திருத்த நடைச் சித்திரங்களும் எழுதியவர்; இந்தப் படைப்புக்கள் பற்றியும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். அத்தோடு நீலாவணனின் கவிதா சாமர்த்தியத்தை தமிழ் என்றும், 'கிழக்கு — மட்டக்களப்பு' என்றும் குறுகிய வட்டத்துக்குள் நோக்குகின்ற மனப்பான்மை களைந்தெறியப்பட்டு, 'நீலாவணன் காலத்தெ— தன்னளவில் பிரதிபலித்த ஒரு ஆற்றல் மிக்க கவிஞன்' என்ற நோக்கில் ஆராயப்பட வேண்டும். இதுதான் ஒரு கவிஞனைப் பற்றிய சரியான ஆராய்வுக்கு வழிவகுக்குமென்று நினைக்கின்றேம். ★


# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

ஆரம்பித்து 10 ஆண்டுகளில் மிகப் பெரிய இலக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள மாத சஞ்சிகை.

இந்த நாட்டின் இலக்கியச் சரித்திரத்தையே மாற்றி அமைத்துக் காட்டும் வல்லமை இச் சஞ்சிகைக்கு உண்டு. எதிர்காலத்தை மகோன்னதமான நம்பிக்கையுடனும் புதிய கம்பீரத்துடனும் உற்சாகத்துடனும் இடையருத உழைப்புடனும் நோக்கும் மாசிகை.

புதிய யுகம் படைக்கும் இந்தச் சத்திய வேள்வியில் நம்முடன் இணைய விரும்புவோர் மாத்திரம் தொடர்ந்து படிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை. சுரொவ்செவ் தொகுத்த நூலின் அறிமுகம்

# சமூகவுடைமை வாதமும் பண்பாடும்

தமிழில்: ஏ. ஜே. கனகரெட்ணு

முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சியும், முரண்பாடுகளையும் சமூக — வரலாற்று ரீதியாக ஆராய்ந்த விஞ்ஞான சமூகவுடமைவாதத்தின் தந்தைகள், நடுத்தர வர்க்க அமைப்பு மனிதன் மனிதனுக வளர்வதற்குப் புறநிலையாக ட்டுக்கட்டையாக இருக்கின்றது என்ற முடிவிற்கு வந்தனர். மனிதனுக்கும் மனிதனுக்கும், தனி ஆளுக்கும் தனி ஆளுக்கும் இடையே எங்கும் ஏற்படும் போராட்டத்தை உருவாக்கும் சமூக நிலைகள் மனிதனை மனிதத் தன்மையற்றவனுக்கி பொருள் ஆசையின் அடிமையாக மாற்றுகின்றன. தனியார் உடைமை உறவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாதது.

நடுத்தர வர்க்க தனியார் சொத்துடைமையின் அடித்தளத்தில் எழும் உறவுகள் 'தோற்ற அளவில் மிக உன்னத சுதந்திரம்'. ஏனெனில் இத்தகைய சமுதாய அமைப்பு 'தனி மனித சுதந்திரத்தின் முழுநிறைவான வடிவமாக தோற்றுவதால்' இவ்வகையிலே 'அன்னியமாக்கப்பட்ட வாழ்க்கைக் கூறுகளான சொத்துடைமை, கைத்தொழில், சமயம் ஆகியவற்றின் இயக்கம் — பொது இணைப்பினுலோ மனிதனுலோ கடிவாளம் இடப்படாத, கால் விலங்குகளாற் பிணைக்கப்படாத இயக்கம் இது—தனிமனிதனுக்கு தனது சொந்த இயக்கமாகப் படுகின்றது; உண்மையில் இது அவனது அடிமைத் தனத்தினதும், மனிதத்தன்மையினதும் சிகரமே' மார்க்சும் எங்கல்சும் 'திருக்குடும்பம்' என்னும் நூலை இயற்றி 100 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. எனினும் அவர்கள் எழுதிய காலத்தை விட, இன்றுதான் இப் போலிச் சுதந்திரத்தைப் பற்றியும் சுருங்கிய நடுத்தர வர்க்க மனதின் மயக்கங்களைப் பற்றியும் அவர்கள் பிட்டுக்காட்டிய உண்மைகள் கூடுதலாகப் பொருந்துகின்றன.

'ஒரேமட்டமாக்குதல்' பாங்கான பொதுவுடைமைச் சிந்தனைகளையும் உணர்வுகளையும் பற்றிய மார்க்சியத்தின் ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமான, உணர்ச்சிமயமான விமர்சனம் (இந்த ஒரே மட்டமாக்குதல்' போக்கை 'கொச்சைப்படுத்தப்பட்ட பொதுவுடமைவாதம்' என மார்க்ஸ் வர்ணித்தார்), முதலிற் செய்யப்பட்ட அளவிற்காவது இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானதாயிருக்கிறது. 'கொச்சைப் படுத்தப்பட்ட பொதுவுடமை வாதத்' தின் நடுத்தர வர்க்கத் தன்மையை (அல்லது திட்பநுட்பமாகக் கூறுவதானு, அதன் கீழ் நடுத்தர வர்க்கத் தன்மையை) மார்க்ஸ் அம்பலப்படுத்தினர். இது இவ்வாறு இருந்தும், அதனைக் கடைப்பிடித்தவர்கள் 'ஒரேமட்டமாக்குதல் பொதுவுடைமை' வாதம் மார்க்சின் கருத்திற்கு நேர்மாருனது என நினைத்தனர். '1844-இல் மார்க்ஸ் எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'மனித ஆளுமையை எங்கும் நிராகரிக்கும் இப்பொதுவுடைமை வாதம், அந் நிராகரிப்பின் வெளிப்பாடான தனியார் சொத்துடைமையின் முன்பின் முரண்பட்டாத வெறும் வெளிப்பாடே. எல்லோர் மீதும் கொண்டுள்ள பொருமை அதிகார பீடத்தில் அமர்த்தப்படுதல் அப்பொருமையின் மறைவான வடிவமே. அது வேறு வழியால் தன்னைத் திருப்திப்படுத்துகின்றது. எல்லாத் தனியார் சொத்துடைமையும், குறிப்பாகத் தன்னை விட செல்வம் வாய்ந்த தனியார் சொத்துடைமை மீது பொருமை கொள்வதோடு எல்லாவற்றையும் ஒரே மட்டமாக்குவதற்கு அது அவாவுகின்றது. இவ்வொரேமட்டமாக்குதல் தான் போட்டியின் சாரம். கொச்சைப்படுத்தப்பட்ட பொதுவுடைமை வாதம் இப் பொருமையினதும் 'ஒரே மட்டமாக்குதல்' அவாவினதும் உச்சக்கட்டமே; ஆகக்குறைந்த மட்டம் என்ற எண்ணமே அதன் அடித்தளம்; அதற்கு வரையறுக்கப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட தரம் ஒன்றுண்டு. இத்தகைய தனியார் சொத்துடைமை ஒழிப்பு உண்மையான கையேற்றல் அல்ல என்பது முழுப் பண்பாட்டினதும் நாகரீகத்தினதும் பொதுப்படையான நிராகரிப்பிலிருந்தும் தேவைகள் அறவே அற்ற வறியவனின் இயற்கைக்கு முரணுன எளிய நிலைமைக்கு திரும்புவதிலிருந்தும் புலனுகும்'

புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு வேண்டிய பௌதிக முற்தேவைகள் முதலாளித்துவ சமுதாயத்திலே ஆக்கப்படுகின்றன என்பதை மார்க்சியம் விஞ்ஞான பூர்வமாக எண்பித்தது; இதனுல்தான் இப் புதிய சமுதாயம் — வர்க்க பேதங்கள் மலிந்திருந்த எல்லா முன்னைய சமுதாயங்களிலிருந்தும் இது தரரீதியாக வேறுபட்டிருக்கும் — சாத்தியமட்டுமல்ல தவிர்க்க முடியாததுமாகும். முதலாளித்துவ அமைப்பிலே ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியைப் பற்றி எங்கல்ஸ் எழுதியது போல, 'உண்மையில் இக் கைத்தொழிற் புரட்சிதான் மனித உழைப்பின் உற்பத்திச் சக்தியை மிக உன்னத மட்டத்திற்கு உயர்த்தியிருக்கின்றது. அதனுல், வரலாற்றிலே முதல் தடவையாக, அறிவு பூர்வமாக எல்லோரிடையேயும் உழைப்பை பகிர்ந்தால் சமூக உறுப்பினர்கள் யாவரினதும் நிறைவான நுகர்வுக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்யவும், தாராளமான ஒதுக்கீட்டை செய்யவும் சாத்திக்கூறு உண்டு மட்டுமல்ல, ஒவ்வொரு தனி ஆளுக்கும் போதிய ஒய்வு நேரத்தையும் வழங்குவதற்கும் சாத்தியமுண்டு. அப்பொழுது, வரலாற்று முதுசமாகப் பெற்ற பண்பாட்டில் பேணிக்காக்கதக்கவற்றை — விஞ்ஞான, கலை, கருத்துப் பரிமாற்றங்களின் வடிவங்கள் — பாதுகாப்பதுடன் அவற்றை ஆளும் வர்க்கத்தின் ஏகபோகச் சொத்தென்ற நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து முழுச் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக மாற்றி அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு வழி பிறக்கின்றது. இங்குதான் திருப்புமுனை அமைகின்றது. மனித உழைப்பின் உற்பத்திச் சக்தி இம் மட்டத்திற்கு உயர்ந்ததும் ஆளும் வர்க்கம் ஒன்று உயிர்வாழ்வதற்கான அத்தனை சாக்குப் போக்குகளும் அற்றுப் போகின்றன. இறுதி ஆய்வில் வர்க்க பேதங்களை பேணுவதற்கு முன்வைக்கப்பட்ட அடிப்படை என்ன? அன்றாட உயிர்வாழ்தலுக்கு இன்றியமையாத உற்பத்தியைப் பற்றிக் கவலைப்படாத வர்க்கம் ஒன்று இருந்தால்தான், சமுதாயத்தின் அறிவுத்துறையை கவனிப்பதற்கு அதற்கு நேரகாலம் இருக்கும். இதுவரை காலமும் வரலாற்று ரீதியாக மிகவும் நியாயப்படுத்தப்பட்டு வந்த இவ் விளக்கம் கடந்த 100 ஆண்டுகளிலே நடைபெற்றுவந்த கைத்தொழிற் புரட்சியினால் அடியோடு வேர்சாய்க்கப்பட்டு விட்டது ஆளும் வர்க்கம் என்ற ஒன்று உயிர்வாழ்தல் கைத்தொழில் உற்பத்திச் சக்தியின் அபிவிருத்திக்கும், அதே அளவிற்கு, விஞ்ஞானம், கலை, குறிப்பாகக் கலாச்சார கருத்துப் பரிமாற்ற வடிவங்களின் வளர்ச்சிக்கும், நாளுக்கு நாள், முட்டுக்கட்டையாக ஆகின்றது'

முன்னைய சமுதாய வளர்ச்சியின் தர்க்கரீதியான நியதியின் ஆய்வை முக்கியமாக அடித்தளமாகக் கொண்ட இப் பொதுப்படையான முன்னறிவு வரலாற்றில் பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் எண்பிக்கப் படவில்லை எனச் சிலர் கருதலாம். கைத்தொழில் ரீதியாக முன்னேற்றம் அடைந்துள்ள மேற்கத்திய நாடுகளிலே நடுத்தர வர்க்கத்தினரே இன்றும் ஆளும் வர்க்கமாகத் திகழுகின்றது. மேலும் இன்று நிகழும் புதிய விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியிலே முதலாளித்துவம் செயல்நிறைவு விளைந்த பங்களிப்பினைச் செலுத்துகின்றது. கலையைப் பொறுத்தவரை, மேற்கத்திய நாடுகளின் இன்றைய கலை 19-ம் நூற்றாண்டுக் கலை வளத்துடன் ஒப்பிடும் போது உண்மையில் பின்னேற்றம் அடைந்திருக்கின்றதா என்பதே எம்முன் உள்ள பாரிய வினா.

மார்க்சியம் மோசசின் சட்டம் அல்ல. தனது முடிவுகள் இறுதியானவை, மாற்ற முடியாதவை என அது கருதுவதில்லை. விஞ்ஞானம் என்ற முறையிலும் போலி எண்ணங்களிலும் மயக்கங்களிலும் இயல்பாகவே அக்கறை கொள்ளாத ஒரு வர்க்கத்தின் கோட்பாடு என்ற முறையிலும், மார்க்சியவாதம் தனது கருத்துக்களை சதா மாறிக் கொண்டிருக்கும் வரலாற்று நிலைமைகளுடன் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்க்கின்றது. எனவே தான் லெனின் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டத்தின் வளர்ச்சி விதிகளை வெளிக்காட்டிய பொழுது முன்னைய மார்க்சிய கருத்து தான் எழுதிய காலச் சூழ்நிலைக்குப் பொருத்தமற்றது என்பதைச் சுட்டிக் காட்டினார். முன்னைய கருத்தின்படி, சமூகவுடைமைவாதப் புரட்சியின் வெற்றி, மிக அபிவிருத்தியடைந்திருந்த கைத்தொழில் மயமான நாடுகளிலே அது ஒரே நேரத்தில் வெற்றி வாகை சூடுவதில் தங்கியிருந்தது. பொதுவுடைமை வாதக் கோட்பாட்டை, அதன் இரு கட்டங்களை — சமூகவுடைமைக் கட்டம், பொதுவுடைமைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டம்— அவ்விரு கட்டங்களுக்கிடையே உள்ள தொடர்பையும் வேறுபாட்டையும், மார்க்ஸ் கூடப் படிப்படியாகத் தான் வளர்த்து பொருள் வலுவுள்ள தாக்கினர்.

எங்கல்சின் 'தீர்க்கதரிசனத்தை' மறுத்துரைப்பவர்களின் வாதங்களைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

மிகவும் அபிவிருத்தியடைந்துள்ள மேற்கத்திய நாடுகளிலே முதலாளிகள் ஆளும் வர்க்கம் என்ற தமது நிலையை இன்னும் காப்பாற்றியுள்ளமைக்கு குறிப்பிட்ட வரலாற்றுக் காரணங்கள் உண்டு: இவற்றைப் பற்றி நாம் ஈண்டு கவலைப்பட வேண்டியதில்லை. எனினும், உலக ஏகாதிபத்திய அமைப்பின் இன்றைய சீரழிவு — உலகிலே முதலாளித்துவ ஆதிக்கத்தைப் பெரிதும் சுருக்கியிருக்கும் சீரழிவு — எங்கல்சின் கூற்றை மறுத்துரைப்பதற்கு மாருக, உறுதிப்படுத்துவதாகவேயுள்ளது.

விஞ்ஞானமும் கைத்தொழிலும் முதலாளித்துவச் சூழ்நிலையில் அபிவிருத்தி அடைந்து வரலாம் (சில துறைகளிலே மிக வேகமாக வளர்கின்றன என்பதை எந்த உண்மையான மார்க்சியவாதியும் மறுக்க முயலவில்லை). எனினும் இத்துறையில் கூட முதலாளித்துவம் சமமின்மையையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஏற்படுத்துவதோடு, மிக முக்கியமாக, ஒரு புறம் விஞ்ஞானத்திற்கும் கைத்தொழிலுக்கும், மறுபுறம் மனிதனுக்கும் மனித அக்கறைகளுக்கும் முரண்பாட்டை வளர்க்கின்றன. மார்க்ஸ் அனென்கொவிற்கு எழுதியது போல, புதிய இயந்திரங்களும், தானுக இயங்கும் இயந்திர சாதன அமைப்புகளும் அவற்றின் முதலாளித்துவ கையாளுமையினல் மனிதனுக்கு எதிராக இயங்குகின்றன. 18, 19-ம் நூற்ருண்டுகளிலே நடைபெற்ற அதே மாதிரி, முதலாளித்துவ உற்பத்தி முறை அதே நோக்கங்களை எய்தும்பொருட்டு பெருகிக்கொண்டு வருகின்றது. அதாவது ஆதாயம் ஈட்டி, மனிதத்துவத்திற்கு எதிரான கெடுபிடிகளால் மனிதனை ஆன்மிக ரீதியாக அழித்து, அவனை 'அன்னியமயம்' என்ற படுகுழிக்குள் (அறவொழுக்க ரீதியாகவும், கலாச்சார தரப்படுத்தல் ரீதியாகவும். சீரழிவு ரீதியாகவும்) மேலும் ஆழமாகத் தள்ளுதல் பெயர்பெற்றநடுத்தரவர்க்க சமூகவியலாளர் எரிக் புரொம் நடுத்தர வர்க்கத்தின் பௌதிக, ஆன்மிக பண்பாடு பற்றிக் கூறிய விமர்சனம் எங்கல்சின் 'தீர்க்கதரிசனத்திற்கு' ஆதரவு அளிப்பது போன்று தோன்றுகிறது. அவர் கூறியதாவது: சிந்தனையுள்ள, உணர்வுள்ள பிராணிகள் என்ற முறையில் நாம் நுகர்வு என்ற மனித நடவடிக்கையில் ஈடுபடுவதால், அந் நடவடிக்கை புத்திபூர்வமானதும், விளைவாக்கமுள்ளதாகவும் மனிதமயமானதாகவும் இருத்தல் வேண்டும். ஆயினும் உண்மையான மனித 'நானி'ற்கு அன்னியமயமாக்கப்பட்ட, செயற்கையாக உண்டுபண்ணப்பட்ட ஆசைகளின் திருப்திப்படுத்தலாகவே அது மேலோங்கி நிற்கிறது.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்சாந்தர் கரனேவ்

# புதிய பாதையில்

# சோவியத் சினிமா

சோவியத் நாட்டில் தினந்தோறும் 1 கோடி 30 லட்சம் மக்கள், சினிமா பார்க்கின்றனர். அவர்களைக் கவர்வது எது? பிரபல பெயர்களா? பெரிய தயாரிப்புகளா? உள்ளத்தைக் கிளறும் பழைய சம்பவங்களா அல்லது புதிய கருப்பொருள்களாசு 'காதலர்களைப் பற்றிய ரொமான்ஸ்' போன்ற படங்களின் அபார வெற்றிக்குக் காரணம் என்ன? எதிர்காலம் படங்களில் எதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்?

கார்லோவி வாரியில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில், 'காதலர்களைப் பற்றிய ரொமான்ஸ்' என்னும் சோவியத் படத்திற்கு மிக உயர்ந்த பரிசு (பளிங்கினலான பூமி உருண்டை) அளிக்கப்பட்டது.

இது ஒரு 'மூன்று அடுக்கு'ப் படமாகும். அதாவது படத்தின் ஆரம்பப் பகுதி, காதல் விழாவின் தொடக்கமாக உள்ளது; விதவிதமான வர்ணங்களும், உணர்ச்சி மிக்க சொற்களும், இசையும் இந்தத் திரைக்காவியத்தின் ஒருங்கிணைந்த அம்சங்களாக விளங்குகின்றன. கறுப்பு, வெள்ளைப் படமாக விளங்கும் மையப்பகுதியில், கதாநாயகன் இறந்து விட்டான் என்று எண்ணிக் கொண்டு, அவன் காதலி மற்றொருவனை மணக்கிருள்; கணவனுடன் சுரத்தில்லாமல் குடும்ப வாழ்க்கை நடத்துகிருள்; அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது; திரும்பி வந்த காதலன் அவளது இன்றைய நிலையைக் காண்கிருன். படத்தின் இறுதிப் பகுதியில், அவள் வாழ்வில் மீண்டும் காதல் துளிர்ப்பதை அவன் பார்க்கிருன். குழந்தை பிறந்த பின்னர், தன் கணவனிடம் அவளுக்குக் காதல் அரும்புகிறது. இந்தக் காதலைத் தூண்டும் சக்தியாகக் குழந்தை விளங்குகிறது. படத்தில் மீண்டும் வர்ணங்கள் மின்னுகின்றன..... கதைச் சுருக்கத்தைப் படிக்கும்போது இந்தப் படம் மிக 'ஆக்கபூர்வமானதாவும்', 'அறிவார்ந்த ரீதியிலும்' இருப்பதாகத் தோன்றலாம். ஆனல், படத்தைப் பார்க்கும் போது இந்த எண்ணம் மறைந்து விடுகிறது; காதலை மிக உணர்ச்சிகரமாகச் சித்தரிக்கும் படம் என்பது நன்கு புலனுகிறது.

'லிபரேஷன்' என்னும் படத்தைத் தயாரித்த யூரி ஒசரோவ் குழுவினர், 'கம்யூனிஸ்டுகள்' என்னும் இதிகாசத்தை இப்போது உருவாக்குகின்றனர். பாசிசத்தின் மீதான வெற்றிக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குப் பின்னர் — இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்—மாபெரும் சகோதரக் கூட்டுக் குடும்பமாக மாறியுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சித்திரிக்கும் படம் இது.

சோவியத் மக்களின் தேசபக்தியையும், ராணுவ வீரத்தையும், 'அவர்கள் தாயகத்திற்காகப் போராடினுர்கள்' என்ற படம் சித்திரிக்கிறது. ஷோலகோவின் நாவலைத் தழுவிய இப்படத்தைப் பிரபல கலைஞர் செர்கி போந்தார்சுக் டைரக்ட் செய்கிறார். சிறந்த நடிகர்கள் இதில் நடிக்கின்றனர். மிகச் சிறந்த கலைச் சித்திரமாக இது விளங்கும் என நம்பலாம்.

ராணுவ, தேசபக்தக் கருப்பொருள்கள் என்பவை, சோவியத் கலைப் படைப்புக்களில் ஒரு நிரந்தர அம்சமாகும். ஏனெனில் வரலாற்றின் பாடங்களைச் சோவியத் கலைஞர்கள் மறந்து விடவில்லை. அந்தப் பாடங்களுக்கும் இன்றைய வாழ்வுக்கும் சம்பந்தமுண்டு என்றும், உலக மக்களின் தலைவிதியுடனும் சமுதாய முன்னேற்றத்துடனும் அவை இணைந்தவை என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

உழைப்புத் துறையில் மனிதர்களிடையேயுள்ள உறவுகள் பற்றியும், மனிதனின் சிந்தனை முறை பற்றியும், மன இயல்புகள் பற்றியும், சோவியத் படங்கள் சித்திரித்துள்ளன.

1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு கடந்த 57 ஆண்டுகளாகச் சோவியத் சினிமா ஒரு புதிய பாதையில் உறுதியாக நடைபோடுகிறது.

இத்துறையில் பெரிய வாய்ப்புக்கள் உள்ளன. 'காதலைப் பற்றி' என்னும் படம், காதலின் கவிதைத் தன்மையை வலியுறுத்துகிறது; அழிக்கப்படுகின்ற அல்லது குறைப் பிரசவமாக விளங்குகின்ற காதலின்போக்கை உணர்ச்சிகரமாகச் சித்திரிப்பதன் மூலம், மனித உள்ளங்களை இது பண்படுத்துகிறது. 'உற்பத்தி' சம்பந்தமான படம் கூட, நெஞ்சைக் கவர்வதாகவும், ஆழமானதாகவும், மனித உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாகவும் இருக்க முடியும்; ஆனால் வாழ்க்கையின் பிரச்சினைகளைப் பற்றிய விவாதத்திற்கு ரசிகர்களை அது இழுக்க வேண்டும்.

இந்தத் திசைவழியில் சோவியத் சினிமாக் கலையின் இலட்சியங்களும் போக்குகளும் மிக முக்கியமானவை; சமுதாய ரீதியிலும் அழகியல் ரீதியிலும் அவை குறிப்பிடத் தகுந்தவை. ஏனெனில், வரலாற்று, ராணுவக் கருப்பொருள்களையும், வர்க்க மோதல்களையும், சோவியத் படங்கள் இதுவரை சித்திரித்து வந்தன. இப்போது உழைப்பாளரின் அன்றாட வாழ்வு பற்றியும், அசாதாரணத்தில் சாதாரணம் பற்றியும், புதிய உலகம் மற்றும் புதிய மனிதன் பற்றியும், அதிக அளவில் தரமான படங்களைச் சோவியத் யூனியன் வெளியிட்டு வருகிறது. ★

---

## மதிப்பு

படித்துப்
பட்டம் பெற்று
சொந்த ஊரிலே
சுகம் கருதிக்
கடமையாற்றியதால்
எனக்கு ஊரில்
மதிப்பில்லை.

வல்லைச் சிலன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைன்ரிஷ் ஹைனே

**எஸ். எச். இஸ்ஹார்**

---

**அதி உன்னத உலகக் கவிஞரின் 178-வது பிறந்த நாளை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப் படுகின்றது.**

---

19-ம் நூற்றுண்டின் ஜெர்மனியின் அதியுன்னதமான இசைக் கவிஞர், தலைசிறந்த கட்டுரையாளர் பிரச்சார இலக்கியப் படைப்பாளர் என்று மதிக்கப்படும் ஹைன்ரிஷ் ஹைனே அவர்களின் 178-வது பிறந்த நாள் விழா ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இம்மாதம் கொண்டாடப்படும். அவரது நூல்கள் உலக இலக்கியத்தின் உச்ச சாதனைகளிலே ஒன்றென ஒளிர்கின்றன: ஜெர்மன் இலக்கியத்தின் ஜனரஞ்சகமான பழமை மூலச்சிறப்புள்ள, மரபுகளையும் கற்பனாலங்கார மரபுகளையும் தாம் வாழ்ந்த கால நிலைமைகளின் கீழ் அவர் வளர்த்து வெற்றிகண்டார். அவரது வாழ்க்கையிலும் இலக்கியப் பணியிலும் முரண்பாடுகள் நிறைந்திருந்த போதிலும் அவர் புரட்சிகரமான ஜனநாயக ஜெர்மனியின் மாபெரும் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

மகத்தான பிரெஞ்சுப் புரட்சி (1789) யினின்று பிரவகித்த மாபெரும் அரசியல், சமுதாயப் போராட்டங்கள் அவரது வாழ்க்கையிலும் இலக்கியப் பணியிலும் வண்டலிட்டு வளப்படுத்தின. 1830 ஜூலைப் புரட்சி (பிரான்ஸ்) அவரது சிந்தனையிலே நிலையான செல்வாக்குப் பெற்று அவரது கவிதையைப் புதிய திசையிலே திருப்பி விட்டது.

பாரிஸ் மாநகரில் இருந்து கொண்டு அவர் 1848-ம் வருடப் புரட்சியை நேரில் கண்டு அனுபவித்தார். ஜெர்மனியில் பிற்போக்கான நிலைமைகள் எவ்வளவுக்கு அவரது மனதை ஒடிப்பதாயிருந்தனவோ அவ்வளவுக்குப் பாரிஸின் புரட்சிகரமான நிகழ்ச்சிகள் அவரை வசீகரித்தன. அதே பாரிஸிலே தான் அவர் கார்ல் மார்க்ஸை சந்தித்துப் பேசும் மறக்கவொண்ணு அனுபவமும் கிடைத்தது. பிரான்ஸ் அவருக்குப் 'புக்ககம்' போல இருந்தது. அறிவு ஆன்மிக ரீதியிலே பிரெஞ்சு மக்களோடு ஒன்றிய நிலையிலே அவர்களிடம் நேசபாசங்கள் வைத்திருந்தார் அவர்.

அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தி பாரிஸில் 1956 பிப்ரவரி 18-ம் நாள் நடந்த கூட்டத்தில் இயோஹனஸ் பேசர் உரையாற்றுகையில் ஹைனேயின் இந்த நேசபாசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் குறிப்பிட்டு, 'பிரான்ஸும் ஜெர்மனியும் ஹைன்ரிஷ் ஹைனேயிடம் சந்தித்து ஒன்று கலந்து விடுகின்றன. அவரது உணர்ச்சியிலே அவ்விரு நாடுகளின் உணர்ச்சி ஒரு ஒளிமயமான ஒற்றுமையைக் காண்கின்றன' என்று கூறினர்.

சமுதாய முன்னேற்றத்தில் ஹைனே ஆர்வமிக்கவர், அது அவரது செய்திக் கட்டுரைகளிலே தெளிவாகப் பிரதிபலிக்கிறது. பூர்பான் அரச வம்சத்தின் ஆட்சியைத் தூக்கியெறிந்து விட்டு பூர்ஷ்வா முதலாளித்துவ ஆட்சி அமைப்பை நிறுவும் இயக்கப் போக்கில் பிரெஞ்சு மக்கள் பெற்ற அனுபவங்களைக் கைமாற்றிப் பரப்புவதானது ஜெர்மன் மக்களின் அரசியல் போராட்டங்களிலே முக்கியமான பாத்திரம் வகிக்கிறதை அவர் உணர்ந்திருந்த காரணத்தால் இக் கட்டுரைகள் உதித்தன. இவற்றிற்குக் கிடைத்த வரவேற்பிலிருந்து ஜெர்மனியிலுள்ள எதிர்ப்புச் சக்திகளின் தேவைகளுக்கேற்றவையாய் அவை இருந்தது நிரூபணமாயிற்று. ஜூலை (பிரெஞ்சு)ப் புரட்சியின் வெற்றிக்குப் பின் பிரான்ஸின் சமுதாய நிலையிலே இந்த எதிர்ப்புச் சக்திகள் மிகுந்த அக்கறை காட்டின. ஜெர்மனியில் மதமும் மெய்ஞ்ஞானமும்' (1834) 'கற்பனலங்காரப் பிரிவினர்' என்று ஹைனே எழுதிய வாதத்திற்கிழுக்கும் ஆய்வு நூல்களை பிரான்ஸில் ஆர்வத்துடன் படித்தனர்.

பிரான்ஸுடன் நேருக்கு நேர் நின்று வாதித்து ஜெர்மன் நிலைமைகளை விமர்சிப்பதற்கு மிகப் பயன்திறமுள்ள வழிமுறையாயிற்று.

நாடு கடத்தப்பட்டு பிரான்ஸிலே தங்கி வாழ்ந்த காலத்தில், ஹைனே பல முற்போக்கான பிரமுகர்களோடு கலந்து பழகி வந்தார். அங்கே அவரும் கார்ல் மார்க்ஸும் நண்பர்களாயினர்; பரஸ்பரமாக அறிவு வளர்ச்சிக்கு ஊட்டமளித்த நட்பு அது. இந்தக் காலப் பகுதியிலேதான் ஹைனே எழுதிய முதிர்ச்சி மிக்க நூல்கள் வெளியாயின; அவற்றில் 'ஹைலீஷியா நெசவாளர்கள்' எனும் கவிதையும் 'ஜெர்மனி - ஒரு குளிர்கால்க் கதை' எனும் இதிகாசக் காவியமும் பிறவும் அடங்கும்.

1856-ல் இயற்கையெய்தும் வரை அவர் எழுதிக் குவித்துக் கொண்டேயிருந்தார். கவிதையும் கட்டுரைகளுமாகப் பிரவகித்தன. தம் காலத்தில் ஓங்கி வளர்ந்த புரட்சிகரமான மக்கள் இயக்கங்களை அவர் ஆதரிக்காது நின்றதில்லை, அவற்றைப் பற்றிய தமது கருத்துக்களைக் கட்டுரைகளிலே வடித்துத் தந்தார். 'இன்று நம்மிடையே வாழ்கிற ஜெர்மானியக் கவிஞர்களில் மிகச் சிறந்த கவிஞர்' என்று அவரை பிரெடெரிக் எங்கெல்ஸ் 1844-ல் மதிப்பிட்டார்.

ஹைனேயின் கலைச் செல்வத்துக்கு உண்மையான வாரிசாகவும் பெட்டகமாகவும் இன்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு திகழ்கிறது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பதிப்பகங்கள் ஹைனே நூல்களைப் புதிய பதிப்புகளிலே வெளியிட்டுள்ளன.

## வளர்ச்சி நிதி

திரு. ந. தேவராஜன் - 50-00
அரசடி வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிர சோகத்தின் பின்னணியில் ஒரு கவிஞனின் இழப்பு!

டொமினிக் ஜீவா

நண்பர் நீலாவணனை நினைக்கும் பொழுது அவரது இனிய உணர்வுகள்தான் முதலில் ஞாபகம் வரும். எவரையும் 'மச்சான்' என உரிமை பாராட்டி அழைக்கும் அந்தக் குரலுக்குப் பின்னாலே மனிதாபிமான உயிர்த் துடிப்பு இழையோடியிருப்பதை நான் அனுபவித்திருக்கின்றேன்.

கடைசியாக நான் அவரைச் சந்தித்து சரியாக ஒரு வருடம் ஆகிவிட்டது.

நானும் தெணியானும் ஓர் இலக்கியக் கூட்டத்திற்காக கல்முனை சென்றிருந்த பொழுது கடைசியாக நான் அவரைச் சந்திக்க முடிந்தது. அதற்கு முன்னர் அவர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு திருமண வீட்டிற்கு வந்திருந்தபொழுது அவர் என்னைச் சந்தித்தார். நண்பர் கனகரட்ணாவையும் போய்ப் பார்த்தார். தனது கவிதைத் தொகுதி ஒன்றை மிகுந்த கலைப் படைப்பு அம்சத்துடன் வெளிக் கொணர வேண்டும் என்ற அவாவுடன் அச்சகங்களைப் போய் விசாரித்தார். நண்பர் கனகரட்ணாவும் உடன் சென்றார். அதன் பிறகு போனவரை அவரது ஊரில்தான் சந்திக்க முடிந்தது.

விருந்தோம்பும் பண்பின் சிகரமே அவர்தான்.

இலக்கியக் கூட்டம் முடிந்து இரவு அவரது வீட்டில் இலக்கிய நண்பர்களுக்கு இராப் போசன விருந்தளித்து எங்களையெல்லாம் கௌரவித்தார்.

நட்ட நடு நிசியில் உணவு முடிந்த பின்னர் பல விஷயங்களைப் பற்றியும் பொதுவாக இலக்கியத் துறையில் உள்ளீடாக இன்று நிலவி வரும் காழ்ப்பு உணர்ச்சி பற்றியும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தோம்.

புதுக்கக் கட்டிய அவரது வீட்டில் மிகத் தாராளமாக மனம் விட்டுக் கதைத்துக் கொண்டிருந்த பொழுது நான் கேட்டேன்: 'நீலாவணன், புதிய வீடு கட்டியிருக்கிறீரே, இதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும்?'

'ஒரு இருபது இருபத்தைந்து முடிஞ்சிருக்கும். கணக்குப் பார்க்கவில்லை...... ஏன்?'

'இன்னுமொரு நாலைஞ்சு கூட முடிஞ்சிருந்தால் வீட்டை முடிக்காமல் விட்டு விடுவீரா?' என்றேன்.

'எப்படியும் முடிச்சுப் போட்டுத்தான் வேறை வேலை பாத்திருப்பன்!...... அது சரி ஏன் இதைக் கேட்கிறீர்?' என்றார்.

'ஒண்டுமில்லை. வீட்டை எப்பிடியும் ஒப்பேற்ற நாலைஞ்சுக்காகப் பிரயாசைப்படும் நீர் உமது கவிதைத் தொகுதியைப் போட ஒன்றிரண்டைச் செலவழிக்கப் பஞ்சிப்படுகிறீரே, அது தான் கேட்டேன்'

ஒரு நிமிஷம் என்னை உற்றுப் பார்த்துவிட்டுக் கவிஞர், 'சரி...... சரி...... வேறை கதை கதைப்போம்' என்றார்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பச்சையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனசில் உள்ளதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

இலக்கியச் சோம்பேறி வாய்ச் சவடால்காரர்கள்தான் இவர்களில் பெரும்பான்மை யோர்கள்.

சும்மா வாய் கிழியக் கதைக்கத் தெரியுமே தவிர, துணிந்து எதிர் நீச்சலடிக்கத் திராணியற்றவர்கள் இவர்களில் பெரும்பான்மையோர்.

இதற்காக என்னில் எரிச்சல்பட்டுப் பிரயோசனமில்லை. துணிச்சல் இருந்தால் இவர்கள் தமது ஆர்வத்தைச் செயலில் காட்ட முன்வர வேண்டும்.

அதை அவர்கள் செய்தால்தான் என்னால் அவர்களை மதிக்க முடியும்; கனம் பண்ண முடியும்.

இதை இங்கு ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், அந்தக் கவிஞனின் குரல் என்னுள் ஒலித்துக் கொண்டிருக்கும் இவ் வேளையில் அவனது படைப்பு மக்கள் மத்தியில் இன்று தொகுப்பாகக் கிடைக்க வழியில்லாமல் போய் விட்டதே.

அதைத்தான் நான் கிழக்கு மாகாணத்திலிருந்து எதிர்பார்க்கின்றேன்.

கவிஞனின் மரண ஊர்வலம் மிக மிகச் சிறப்பாக நடந்ததென்றும், ஏராளமான மக்கள் பங்கு கொண்டார்கள் எனவும் சண்முகம் சிவலிங்கம் கூறினார். உண்மை. இந்த நாடு எழுத்தாளர்களை இன்று மதிக்கின்றது. கவிஞர் நாகராஜன் இறந்த பொழுது யாழ்ப்பாணமே திரண்டு வந்து அஞ்சலி செலுத்தியதை நாம் கண்ணாரக் கண்டோம்; பெருமைப்பட்டோம்.

நீலாவணனைப் பொறுத்தவரையில் ஒன்றை நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அவர் உண்மையான ஒரு மொழி அபிமானியே தவிர, மொழி வெறியனோ, இன வெறியனோ அல்ல என்பதுதான் அது.

ஒரு கவிஞனின் மறைவை அடுத்து இந்த நாட்டுப் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் நடந்து கொண்ட முறை பாராட்டத்தக்கது. குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் எழுத்தாளர்கள் அனைவரும் முன் கையெடுத்து உதவினர்.

தமது சொந்த உடன்பிறப்பைப் பறிகொடுத்து விட்டவர்கள் போலப் பரிதவித்தது மத்திரமல்ல, இறுதிக் காரியங்களிலும் தோள் கொடுத்து பரஸ்பரம் ஒத்துழைத்தது நெஞ்சு பூரிக்கத் தக்க நிகழ்ச்சிகளில் ஒன்று.

தினகரனில் வெளிவந்த நுஃமான் அவர்களது கவிதை என் மனதை அப்படியே தொட்டு விட்டது. அதே வாரம் மட்டும் எஸ். பொ. அதே பத்திரிகையில் எழுதிய **'நீலாவணன் நினைவுகள்'** என் மனசை உருக்கிவிட்டது. 'இப்படிப்பட்ட அருமையான இலக்கியப் படைப்புக்களை மக்கள் சுவைத்துப் படிப்பதற்காகவாவது எழுத்தாளன் ஒருவன் இறந்துதான் போகட்டுமே' என்று கூட ஒரு கணம் என்னை யோசிக்கச் செய்தன, இவை இரண்டும்.

எழுத்தாளன் உயிருடன் இருக்கும்பொழுதே ஆக்க பூர்வமாக இவைகளை நாம் செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். சாகும்பொழுதாவது அந்தக் கலைஞன் பெருமையுடன் செத்திருப்பானல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பாமல் இருந்த போதிலுங்கூட, பொது அழைப்பை ஏற்று, என்னையும் எனது குடும்பத்தையும் மதித்துக் கௌரவித்து எனது புது மனையாகிய

## 'யோகபவனம்'

# மங்கள மனைப் புகுவிழா

மங்கள நிகழ்சிகளில் 5-2-75-ல் நெஞ்சினிக்கக் கலந்து கொண்ட சகல

**இலக்கிய நண்பர்கள்**
**அரசியல் தலைவர்கள்**
**இன சன உறவினர்கள்**
**நெருங்கிய நண்பர்கள்**
**உத்தியோகத் தோழர்கள்**
**மற்றும்**
**எம்மை நேசிக்கும் சகல நெஞ்சங்கள்**

ஆகிய சகலருக்கும் எமது மனங் கனிந்த மகிழ்ச்சியையும் நன்றி யையும் தெரிவிப்பதில் பெருற்சாகம் கொள்ளுகின்றேம்.

2ம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில்.

க. துளசிகாமணி (செந்தாரகை)
யோகாம்பிகை

THE

SHOP THAT TOPS

SHAHRAZ

OF COURSE

676, GALLE ROAD,

COLPETTY.

234 ஆ காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா [illegible] மா. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org